அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 14 இதழ் : 1	சுபகிருது ௵ சித்திரை ஏப்ரல்—மே 1962	வருட சந்தா ரூ. 3.00

மீனாக்ஷி சுந்தரேசர் திருமணம் (பக்கம் 6)



18583
MAHOPADHYAYA ... U. V. S. ... LIBRARY ... BESANT NAGAR, MADRAS-90

உள்பொருள்

பக்கம்

1. தித்திக்கும் தெள்ளமுது (திருப்புகழ்மணி) ... 1
2. திருவிளையாடற் புராணம் (கி. வா. ஜ.) ... 6
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... 10
4. 'சத்திபாணி' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 15
5. தகுதி உண்டா (கி. வா. ஜகந்நாதன்) ... 26
6. வாழும் வழி (ரஸபதி) ... 30
7. நக்கீரர் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.,) ... 37
8. இறை வழிபாடு (பி. என். பாலசுப்ரமண்யன்) ... 42
9. SAT SANG OR THE SCHOOLS OF DIVINES (*Thiruppugal Mani*) ... 47

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 14	சுபகிருதுஞு சித்திரைமீ ஏப்ரல்—மே 1962	இதழ் 1

தித்திக்கும் தெள்ளமுது

(திருப்புகழ்மணி)

அன்பெனும் ஐசுவரியத்தை எல்லா ஜீவராசிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளித்திருக்கிறான் ஆண்டவன். ஆனால், அந்த ஐசுவரியத்தைச் சரியானபடி அனுபவிக்க ஜீவராசிகளுக்குத் தெரிவதில்லை. அன்பை உலகப் பொருள்களிடம் செலுத்தினால் சிதறி வீணாகி விடுகிறது. ஆண்டவனிடம் செலுத்தினால் அழியாத ஆனந்தத்தைத் தருகிறது. உலகப் பொருள்களிடமுள்ள அன்பைக் கண்ணனிடம் செலுத்திய கோபிகள் பேரின்பம் அடைந்தார்கள். அரூபமான அன்பு நிறைந்த உள்ளத்தில் எந்தெந்தச் சூழ்நிலையில் எந்தெந்த ரூபம் தேவையோ, அந்தந்த ரூபத்துடன் பிரம்ம ஸ்வரூபம் தோன்றுமாம். உலகெங்கும் நிறைந்த பிரம்ம சுவரூபம் ஒன்றுதான். அந்த பிரம்ம சுவரூபத்துடன் கலந்து சிவமாய் விடவேண்டும். கலப்பதெப்படி? அதற்குச் சித்தர் வழி

கருடன்முன் பாம்பஞ்சும் தன்மைபோல், ஞானப்
புருடர்முன், மாயை புறங்காட்டிப் போகும்மே.

சொல்லுகிறார். எங்கும் நிறைந்துள்ள ஒன்றே ஒன்று நம்முள்ளும் ஒன்றி யிருக்கிறது. அவ்வாறு ஒன்றி யிருக்கும் ஒன்ருகிய சிவத்தைப் பார்க்க முடியாமல், நான், நான் எனும் ஆணவமாகிய களிம்பு நம்முள்ளத்தில் படிந்து தடை செய்கிறது. அதை நீக்கி விட்டால் உள்ளே உள்ள சிவத்துடன் கலந்து சிவமாய் விடலாம்.

> ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
> ....
> கன்னல் நின்ற செம்பொனைக் களிம்பறுத்து நாட்டினல்
> அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயவே.

என்ருர் சித்தர்.

பிரம்மத்தின் எந்த ரூபம் உலகத்தில் நல்ல காரியத்திற்கு வரும் விக்கினங்களை நீக்கி, சித்தியையும் புத்தியையும் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ அந்த சுவரூபமே விநாயக ரூபம். நீ வேறு நான் வேறு என்று வேற்றுமைப் படுத்தும் வஞ்சகருக்கு அவனைக் காண முடியாது. முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் துதிக்கின்ற துதி மிகத் திரண்டு துதிக்கையா யிருக்கிறதாம். வெளியிலே ஓங்காரமாகிய யானையின் வடிவம். உள்ளே ஜ்வலிப்பது ப்ரும்ம ஜோதியாகிய சிவஞானம். அந்த சிவஞானத்தை யுபதேசிப்பவன் சிவ சுப்பிரமணியன். அந்த சுப்பிரமணியன் திருப்புகழினுள் நாதஸ்வரூபமாய் ஒலித்துக் கொண்டிருக்கிறன்.

நாமனைவரும் ஓங்காரமாகிய பரத்தினுள் இருக்கிறோம். எல்லாவற்றையும் தனக்குள் வைத்துக் காக்கு ரக்ஷிக்கும் பொருள் எதுவோ அதுவே பரம்.

> களைக் கயிறுகொண்டு கட்டுங் கதைபோல்,
> வினைகள்தாம், ஞானிகள்முன் வீழ்ச்சி யடைந்திடுமே.

அந்த பரத்தைதத்தான் வடமொழியில் அக்ஷரம் என் பார்கள். ஞான சுவரூபமாய் எங்கும் நிறைந்து அருள்புரியும் மூர்த்திக்கு முருகன் என்று பெயர். அவன் எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் இருக்கிறான். எங்கு ஜீவன் முளைத்திருக்கிறதோ அங்கு முருகனும் கூடவே முளைத்திருக்கிறான். அவன் இல்லாத இடமே யில்லை. ஆதலால் பாவிகள் என்று தள்ளுவதற்கும், அறிவில்லாதவரென்று இகழ்வதற்கும் ஒருவருமே யில்லை. பெற்ற அப்பன் தன் பிள்ளை துஷ்டனென்று தள்ளி விடுவானு? உலகெலாம் பெற்ற அம்மையப்ப ஞகிய ஆண்டவன் தன் குழந்தைகளின் அழுக்கைப் போக்கி அணைத்திடுவானே யன்றி கைவிடமாட்டான். ஆண்டவனுடைய நாமங்கள் கருணைரஸம் நிரம்பி யவை. அந்த நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந் தால், அவன் பார்வை பட்டுப் பாவங்கள் சிதறிவிடும். 'ஆணவ வழுக்கடையும் ஆவியை விளக்கி அனுபூதி யடைவித் தருளும்பார்வைக் கார'னல்லவோ முருகன்.

ஆணவம் மூட்டையாய்க் கட்டிக் கொண்டிருந்த தாம் அருணகிரியாருக்கு. அதைத் தள்ள முடியாமல் தவித்தார். திருவண்ணமலை கோபுரத்தின் மேலேறி முருகனைப் பாடினர். அந்த மூட்டை கீழே விழுந்து விட்டது. முருகன் உள்ளே புகுந்து விட்டான். முருக மயமாய் விட்டார். நம் நெற்றி நடுவிலுள்ள சுழும்ன ஸ்தானமே கோபுரம். அதில் நம் கருத்தைச் செலுத்தி நாமத்தைச் சொன்னல் ஆணவ மூட்டை கீழே விழுந்து விடும். முருகன் உள்ளே புகுந்து விடுவான்.

முருகா வென்றழைத்தால் போதும். தன்னை யழைக்கும் பக்தர்களைக் காக்க ஓடி வருவதற்கு

ஆனைபோல் பாதிக்கும் ஆணவந்தான், மேலோர்முன்
பூனைபோல் குன்றிப் போனகதை ஓதிரோ ?

மயிலின்மேல் தயாராய்க் காத்துக் கொண்டிருக்கி றானும் முருகன், அந்த சிறிது நேரம் கூட பக்தர்கள் வருந்தக் கூடாதென்ற கருணையினால் தன் வருகையை அவர்களுக்கு முன்னமே அறிவிப்பதற்காகச் சேவல் கொடியைக் கையிலேந்தி யிருக்கிறான். நூறுகோடி சூரியர்கள் உதித்ததுபோன்ற ஒளியுடன் முருகன் மயிலின்மேல் வந்து விட்டான்; உங்களை இதுவரை யில் வருத்தி வந்த ஆணவமாகிய இருளும் ஒழிந்து விட்டது; எழுந்திருங்கள் என்று கூவுகிறதாம் அச் சேவல்.

அடியார்கள் கூடிப் பஜனை செய்யும் நாம சங் கீர்த்தனத்தின் ஒலியே முருகன் கொடியாகிய சேவலின் குரல். அருணகிரியார், முருகா! நீ முதலில் என்னை அடியார் கூட்டத்தில் சேர்த்துவிடு; பிறகு வரம்கொடு என்றார். நாமத்தைக் கேட்டாலே போதும். அந்த நாமம் காதில் புகுந்து உள்ளே சென்றடைகிறது. அவ்வாறு அடைந்ததென்று அறிவதெப்படி? நாமரஸம் உணர்ச்சியில தித்திக்கும்.

"பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுது கண்டேன் செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த ஸாகரத்தே"

நம்முள்ளத்தில் பரமானந்தக் கடலொன்றிருக் கிறதாம். அதில் ஆறுமுகமும், பன்னிரு தோள்களு முடைய அமுதைக் கண்டாராம் அருணகிரியார். அது மிகமிகத் தித்திக்குமாம். ஆனால் அந்தத் தித்திப்பை யுணர முடியாமல் நம்முள்ளத்தில் நான், நான் எனும் அகங்கார மிருக்கிறதாம். அது மிளகாய்ப் பொடியைவிட மிகக் காரமுடையதாம். அது தான்

புத்திமுத்தி மொய்த்துவரும் புண்ணியர்தம் வாழ்க்கையினில்,
சித்தம் அமைதியுறும்; சேரும் திருவருளே

முருக ரஸத்தின் தித்திப்பை யுணர முடியாமல் தடுக்கிறதாம். அந்தக் காரத்தை முதலில் போக்க வேண்டும். போக்குவதற்குப் புத்திக் கமலம் உருகவேண்டும். உருகிப் பெருகும் அன்பு நீரில்தான் அந்தக் காரம் கரையும். திருநீற்றைப் பூசி முருகநாமத்தைச் சொன்னால், புத்திக் கமலம் உருகும். பிறகு நாம ரஸத்தின் தித்திப்பை யுணரலாம். அப்பொழுது பரப்ரும்மத்தை எந்தெந்த ரூபமாய்ப் பார்க்க விரும்புகிறோமோ, அந்தந்த ரூபமாய் உள்ளத்தில்தோன்றி அருள்புரியும்.

" யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

நான் எனும் உணர்ச்சியை விழுங்கி விட்டால், எங்கும் நிறைந்த தானாகிய நிலை வந்து விடும். அந்த நிலையே முருகனுடைய நிலை. விடுதலை. மண்டைக் கொழுப்பை விட்டு விட்டால் கிடைக்கும் நிலையே விடுதலை. அதுவே மோக்ஷம். ஸ்ரீ சக்கரத்தின் நடுவாகிய பிந்துஸ்தானத்தி லிருப்பதே வேல். வேலையும் முருகனையும் பிரிக்க முடியாது. தாயின் மடியிலிருந்து முருகனைப் பிரிக்க முடியாது. வேலை நினைப்பதே சிறந்த தவம். வேல் முருகா வென்று சொல்லுவோம்.

சுபம்.

புத்தாண்டு வாழ்த்து

அமிர்தவசனி வாசகர்கட்கும் ஏனையோர்க்கும் சுபகிருது ஆண்டில் சர்வ மங்களம் உண்டாக என்று வாழ்த்துக் கூறுகிறோம். —ஆசிரியர்.

தாயாய் வளர்க்கின்ற தண்ணருளை எண்ணுரைத்,
தீயாய் எரிக்கும், திமிதமிட்ட முன்வினையே

திருவிளையாடற் புராணம்

(கி. வா. ஜ.)

சைவப் பெருமக்களால் மூன்று மணிகளாக மதிக்கப் பெறும் புராணங்கள் மூன்று. அவை பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் என்பவை. இந்த மூன்றையும் பலர் பாராயணம் செய்வதுண்டு. இந்த மூன்றில் பெரிய புராணம் சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாவதாக விளங்குவது. கந்த புராணமோ பதினெட்டு மகா புராணங்களில் ஒன்று. திருவிளையாடற் புராணம் ஒரு தல புராணம். மதுரையம்பதியில் எழுந்தருளி யிருக்கும் பெருமானுடைய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கை விரிவாக விளக்குவது அது. இறைவனுடைய திருவிளையாடல்களைச் சொல்வதனால் அதற்குத் திருவிளையாடற் புராணம் என்ற பெயர் வந்தது.

மகா புராணங்கள் பதினெட்டு, உப புராணங்கள் பதினெட்டு என்று வரை யறுத்திருக்கிறார்கள். தல புராணங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. வடமொழியாளர் அவற்றிற்குப் பெருமதிப்பு அளிப்பதில்லை. தமிழிலோ பல தல புராணங்கள் காவியங்களாக விளங்குகின்றன. பல பெரும் புலவர்கள் தலபுராணங்களை இயற்றிச் சிறப்படைந்திருக்கிறார்கள். அந்தகக் கவி வீரராகவ முதலியார், சைவ எல்லப்ப நாவலர், சிவப்பிரகாச சுவாமிகள், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலிய புலவர்கள் தல புராணங்களைக் காவியங்களாகவே பாடி யிருக்கிறார்கள்.

கன்றும் உயிரைக், கறவைபசு போல்தொடரும்
நன்றும் சிவத்தை, நாமுணர வேண்டாவோ ?

இந்தப் புலவர்கள் பாடிய தல புராணங்கள் பல இருந்தாலும் திருவிளையாடற் புராணத்துக்கு உள்ள சிறப்பு மற்றவற்றிற்கு வரவில்லை. மதுரை மிகச் சிறந்த தலமாதலின் அதற்குரிய புராணம் சிறப்படைந்தது என்று சொல்வதற்கு இல்லை. ஏனெனின் சிவதலங்களுக்குள் முதலாவதாக வைத்து எண்ணப் பெறுவது திருத்தில்லை. அதற்குப் பல புராணங்கள் உண்டு. சந்தானசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் பாடிய கோயிற் புராணம் சிதம்பரத்தின் சிறப்பைச் சொல்வதே. சிதம்பர புராண மென்றே ஒரு புராணம் இருக்கிறது. இப்படி யிருந்தும் அந்தப் புராணங்கள் திருவிளையாடற் புராணத்தைப் போலத் தமிழ் நாட்டில் பரவவில்லை.

மதுரைப் பெருமான் இயற்றிய திருவிளையாடல்கள் மிகவும் சுவையாகவும் பத்திச் சுவையை ஊட்டுவனவாகவும் இருப்பதனால், அவற்றைச் சொல்லும் புராணம் சிறப்புப் பெற்றது என்று ஒரு காரணம் கூறலாம். மதுரைத் தலத்தைப் பற்றிய புராணங்களும் பல உண்டு. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்துக்கு முன்பே செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்ற புலவர் பெருமான் இயற்றிய பழைய திருவிளையாடற் புராணம் ஒன்று இருக்கிறது. அதை வேம்பத்தூரார் திருவிளையாடல் என்று வழங்குவர். அதனையன்றிக் கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம் என்ற நூல்களும் இருக்கின்றன. இருப்பினும் பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணமே தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டிப் பாராயணம் செய்வதற்குரிய நூலாக விளங்குகிறது.

இதற்கு முக்கியமான காரணம் பரஞ்சோதி முனிவருடைய வாக்கின் நயந்தான். முந்திரிப் பழத்தைப்போல் எளிதில் நுகர்ந்து சுவை பெறும் வகையில அந்த நூல் அமைந்திருக்கிறது. திருஞான சம்பந்தர் சம்பந்தமான நிகழ்ச்சிகளும்,

---

தர்மம் தலைகாக்கும் என்பதனைத் தாமறியார் ;
கர்ம இருள்நிழலிற் கண்கலங்கி நிற்பாரே.

மாணிக்க வாசகர் வரலாறுகளும் வரும் பகுதிகளைப் பார்த்தால், பரஞ்சோதி முனிவருடைய வாக்கின் இனிமை புலனாகும்.

மதுரைத் தலத்தின் சிறப்பைக் கூறும் வடமொழி நூலாகிய ஹாலாஸ்ய மகாத்மியம் என்பதைத் தழுவிப் பாடியது திருவிளையாடற் புராணம். நாட்டுப்படலம், நகரப்படலம் முதலியவற்றோடு காவிய முறையில் அமைந்தது இது. ஆலவாயுடைய பெருமானைக் காவியத் தலைவனாகக் கொண்டு நிற்பது இப்புராணம்.

" தன்னிகர் உயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவ னாக
முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெலாம் முகமன் அன்றோ?
அன்னது தனதே யாகும் அண்ணலே பாண்டி வேந்தாய்
இந்நகர்க் கரசன் ஆவான் இக்கவிக் கிறைவன் ஆவான் "

என்று பரஞ்சோதி முனிவர் பாடுகிறார். " தன்னே ரில்லோன் தலைவனாக " அமையக் காவியத்தைப் பாடவேண்டும் என்று தண்டியலங்காரம் விதிக்கின்றது. " அந்த இலக்கணத்தின் படி பார்த்தால் மற்றவர்களை யெல்லாம் தலைவர்களாகக் கொண்டு காப்பியம் பாடினால், அது உபசாரமாகவே முடியும். ஆனால் உண்மையில் தனக்கு ஒப்பார் இல்லாத சுந்தரேசப் பெருமானைத் தலைவனாக வைத்து எழுதும் காப்பியம் பொருத்தமானது " என்று பரஞ்சோதியார் சொல்கிறார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களையும் பெற்றது மதுரை மாநகர். தண்டமிழ் இலக்கியங்களில் வேறு எந்த நகரையும்விட மிகுதியாகப் பாராட்டப் பெறுவது இந்த நகர். பாண்டிய மன்னர்களின் அரசிருக்கை நகராகவும் கடைச்சங்கம் நிலவிய தமிழ் இராசதானியாகவும் இந்த நகர் விளங்கியது. மதுரைக்காஞ்சி என்ற சங்கநூல் இதன் பெருமையை விரிவாகச் சொல்கிறது. மற்றச் சங்கநூல்களிலும் இதன் புகழ் விரவி வருகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் என்ற தனிப்பகுதியே இருக்கிறது.

தேன்தேரும் வண்டுகள்போல், தெய்வ அருணூலை
தாம்பருகும் உத்தமர்கள், தாள்பணிந்து வாழ்வோமே.

இவ்வாறு தெய்விகச் சிறப்பு, வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு முதலிய பல சிறப்புகளைப் பெற்ற மதுரை இன்றும் சிறந்த நகரமாகவே விளங்குகிறது. சேர சோழ பாண்டியர்கள் ஆகிய முடியுடை மூவேந்தர்கள் வாழ்ந்த தலை நகரங்களில் இது ஒன்றுதான பண்டைச் சிறப்புக் குன்றாமல் விளங்குகிறது. இதற்கு இங்கே எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ மீனாட்சியம்மையின பேரருளே காரணமாகும்.

இந்தத் தலத்திற்குப் பல திருநாமங்கள் உண்டு. அவற்றில் மதுரை, கூடல், ஆலவாய் என்பன சிறந்தவை. இந்த மூன்று திருநாமங்களும் அமைவதற்குக் காரணமாக மூன்று திருவிளையாடல்கள் இருக்கின்றன.

தமிழுக்கு உறைவிடமாக இருந்தது இந்நகர். பாண்டி நாட்டுக்குச் செந்தமிழ் நாடு என்று பெயர். அதில் தலை நகரமாகிய கூடல் தமிழுக்கும் தலை நகராக விளங்கியது. ஒரு புலவர் தமிழைக் கூடல் தமிழ் என்று சிறப்பிக்கிறார்.

இங்கே எழுந்தருளிய பெருமான் சொக்கலிங்கப் பெருமான்; சுந்தரேசன் என்னும் திருநாமமும் உண்டு. அம்பிகை முதலில் தடாதகைப் பிராட்டியாகத் திருவவதாரஞ் செய்து பாண்டியன் மகளாக வளர்ந்து பாண்டிய நாட்டை ஆளும் பேரரசியாகத் திகழ்ந்தாள். அப்பால் சிவபெருமான் சுந்தரபாண்டியனாக எழுந்தருளி வந்து தடாதகைப் பிராட்டியாகிய அங்கயற்கண்ணி யம்மையை மணந்து பாண்டிய அரசனாக முடிபுனைந்து செங்கோலோச்சினான். அப்பால் அவர்கள் திருமகனாக முருகன் திருவவதாரம் செய்து உக்கிரப் பெருவழுதி என்ற திருநாமம் பெற்றுப் பாண்டிநாட்டை ஆண்டு வந்தான். முத்தமிழும், அம்மை அப்பன் பிள்ளை என்னும் முப்பெருந் தெய்வமும் தமக்குரிய இடமாகக்கொண்டு நலம் செய்த திருத்தலம் இதுவென்றால், இதன் பெருமையை வரையறுத்து எல்லைகட்ட முடியுமா?

இங்கே எம்பெருமான் புரிந்த அருள் திருவிளையாடல்களை ஒவ்வொன்றாக இனிப் பார்க்கலாம்.

இரும்(பு) ஆலையில் பிழிந்திட்டாலும், என்னே!
கரும்பு சுவையில் குன்றா; அஃதேபோல் கண்ணியரே.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

II. நடச்சிவ பதயே நமோநம:

நடச்சிவ - நடனமாடும் (கூத்தியற்றும்) சிவமாகிய; பதயே - தலைவனுக்கு ; நமோநம : போற்றி ! போற்றி !!

நடமாடும் நம்பன் :

கூத்தியற்றும் கூத்தரசன் சிவபிரான் ஆவன். அவன் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களை உடலினிடத்தும்; மறைத்தல், அருளல் என்ற இரண்டினை உயிரிடத்தும் செய்யவே அற்புதக் கூத்து ஆடுகிறான். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' ஆதலின், அகிலாண்டங்களும் அனைத்துயிர்களும் இயங்கவே, அசைவில்லாத ஆண்டவன் தாண்டவம் செய்கிறான். பார்க்கும் கண்ணாடிமுன் ஒருவன் நின்றான். அவனது நிழல் அதில் தெரிந்தது. அந்நிழல் கைகளையும் தலையையும் அசைக்க வேண்டுமென்று எண்ணினான், அதற்காக கண்ணாடியின் முன்நிற்கும் இவன் தன் கைகளையும் தலையையும் அசைத்தான். நிழலும் அவ்வாறே செய்யக் கண்டான். அதேபோல உலகமே நிலைக்கண்ணாடி ; அதனுள் காணப்படும் உயிர்களே இறைவனது நிழல் - (பிரதிபிம்பம்). இவ்வுயிர்களாகிற நிழலை அசைக்கவேண்டி இறைவன் தான் ஆடுகிறான். இதுவே ஐந்தொழில் கூத்தின் தத்துவமாகும்.

" நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல் புவனம்
ஆக்கி அளித்தருளும் ஆணை " (குமரகுருபரர்)

[இடையீடில்லாமல் ஆடி (கண்ணாடியிலுள்ள) நிழலை அசைவிப்பவன் போல உலகங்களைப் படைத்து காத்து அருளும் ஆணை.]

கற்றதனை, நல்லோர்கள் மற்றவர்க்கும் கற்பித்துப்,
பெற்றபயன் இன்பம் ; பிறவிப் பயனிதுவே.

இந்தத் திருநடனம் உயிர்களுக்கு அச்சம் தரும் பிறவித் துயரை நீக்கவே அமைந்ததாம்.

" ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் "
(மணிவாசகம்.)

நடன வகை :

செஞ்சடை வானவர் செய்யும் நடனம் இருவகைப்படும். ஒன்று உயிரில் நடக்கும் ஞான நடனம். மற்றொன்று உலகில் நடைபெறும் ஊன நடனம் ஆகும். ஞான நடனம் (Dance in the soul) அகமுக அநுபவிகட்கே காட்சியாவது. இது, அடியாரது இதய தகராச குகையுள் நடைபெறும். ஊன நடம் (Dance in the Universe) புறத்தில் நடைபெறும். இவ்வித நடனங்கள் இயற்றும் ஈசனையே நடேசன் என்பர்.

நடேசனும் குகேசனே !

(i) மேற்சொன்ன நடேசனான ஐம்முகச் சிவனே குகேச னான அறுமுகச் சிவனாவன்.

" ஈசனே அவன் ஆடலால் மதலையா யினன்காண்
ஆசிலா அவன் அறுமுகத் துண்மையா லறிநீ
பேசின் ஈங்கிவன் அரனெடும் பேதக னல்லன் "
(கந்தபுராணம்.)

எனவே ஐம்முகச் சிவனே அதோமுகங்கூடி அறுமுகனாக வந்தான் என்று அறிய வேண்டும். மேலும் பசுவாகிய ஆன்மாவை அசைத்தாட்டி ஐந்தொழி லியற்றும் நடன நடேசனும் அவனே.

(ii) வடமொழிக் காந்தம் சம்பவ காண்டம் 35-வது அத்தியாயம் 15-ம் சுலோகத்தில் " வேத வேதாந்தங்களில் தகாராகாசமானது குஹை எனக் கூறப்படுமன்றோ? சகல உயிர்களின் இருதய கமலங்களில் வசித்திருப்பவன் உன் மகனாகலின் அவன் குகனெனப்படுகிறான் " என உமாதேவிக்

தாய்போலும் அன்பைத் தாங்காட்டும் நற்குருவைச்,
சேயாகிச் சேர்வாரைச், சேர்கின்றாள் பாரதியே.

குச் சிவனுர் கூறலானும், நடமாடும் நடேசன் சிதம்பரத்தில் (சித் - ஞான+அம்பரம் - ஆகாசத்தில்) ஆடுவது போலக் குகேசனும் யோகியரது இதயம் என்ற தகராகாசத்து அனவரதத் தாண்டவம் இயற்றுவன்.

"இதய பங்கய குகரமே குகை என்ப தாரிய பாடையில்
அதனு ளாய சிதம்ப ரத்தினுள் அமல ஞானவிண்
மெய்யனுய்ச்
சததமும் சுக நடன மேபுரி தம்பிரா னேயோர் குகனெனுக்
கதறு மாமறை அவனே அன்றியோர் கடவுள் நாமறி
யேமரோ"

[இதய தாமரை யுள்ள இடமே 'குகை' என்று வட மொழியில் கூறுவர். அதனுள்ளிருக்கும் சிதம்பரத்தில் சிதா காச சிவமாய் எப்போதும் ஆனந்தக் கூத்தாடும் தம்பிரானே (முருகனே) ஒப்பற்ற குகன் என்று வேதங்க ளியம்பும். அவனே யன்றி வேறு கடவுளை நாம் அறியோம்.]

என்ற பாம்பனடிகளது தகராலய ரகசியமும் ஈண்டு கருதத்தக்கது.

(iii) சண்முகச் சகச்சிர நாமங்களில் "சங்கராய நம: சிவாய நம:" என்ற திருநாமங்கள் குகனுக்கே படிக்கப்பட் டுள்ளன.

(iv) சிதம்பரத் திருப்புகழில் நம் அருணகிரியார்

" மன்றுளாடும்—சிவசிவ ஹரஹர தேவா நமோநம
தெரிசன பரகதி ஆனுய் நமோநம
திசையினு மிசையினும் வாழ்வே நமோநம
திரிபுரம் எரிசெய்த கோவே நமோநம
ஜெயஜெய ஹரஹர தேவா சுராதிபர்—தம்பிரானே"

எனச் சிவனுரை முருகவேளாகவே கூறுகிருர்.

உடனபிறந்தார் போலுலகா என்றே உணரில்,
திடங்கொண்ட மெய்ஞ்ஞானம் சேருமிது நிச்சயமே.

(vi) ஐம்முகச் சிவனார் திருச்சிற்றம்பலத்தில், இடதுபால் சிவகாமி அம்மையார் இருக்க, அவரைப் பார்த்துக் கொண்டே நடனம் செய்கிறார்.

" மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்பலத்தே
ஆதியும் முடிவு மில்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் " (சேக்கிழார்)

அதுபோலவே நம் குமரவேளும் அடியாரது இதயமான தூய அம்பலத்தில் இடதுபக்கம் தெய்வயானை தேவியுடன் ஆடுவதை,

" தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம "

என்று திருவாவினன்குடித் திருப்புகழில் விளக்குகிறார்.

(v) மேலும் இலிங்கபுராணம், தோகை மயில் வாகனப் பெருமானே தூவெண் மதிசூடும் சிவனெனவும், தெய்வயானை யம்மையே சேயிழையான உமாதேவியாகும் என்று,

" தூவி மாமயில் ஊர்பவன் சுடர்மதி அணிந்தோன்
தேவ யானையே திருந்திழை உமையவள் ஆமால் "

என முழங்குகிறது.

(vi) சிவனே குமரன் என்பதற்கு இன்னொரு குறிப்பும் பார்ப்போம். சிவனாரது முகங்கள், கண்கள், கரங்களையும், செவ்வேளின் முகங்கள், கண்கள், கைகளையும் கூட்டினால் ஒரே தொகை வருகிறது காண்க.

	சிவனார் :	செவ்வேள் :
முகங்கள்	5	6
கண்கள்	15	12
கைகள்	10	12
மொத்தம்	30	30

கற்றடங்க நின்றார் கருணை விலாசமுளார் ;
மற்றவர்கள் வாய்ஞானம், நாம்மதிக்கல் ஆவதுவோ ?

(vii) ஐந்து முகன் என்ற சொல்லில் ஆறு எழுத்துக்களும், ஆறுமுகன் என்பதில் ஐந்து எழுத்துக்களும் இருப்பதால் ஐம்முகனே அறுமுகன் என்பது தெரிகிற தல்லவா? ஆதலால் நடனச் சிவமாகிய தலைவனுக்கு வணக்கம் கூறியதாம்.

நடமாடும் சிவன் முருகன் :

நம் அருணகிரிநாத சுவாமிகள் முருகவேள் நடனத்தை அநேக முறை வேண்டித் தரிசிக்கப் பெற்றார்.

"நாரணனும் வேதன் முன்பு தெரியாத ஞான நடமே
புரிந்து—வருவாயே

"தோதீ திகு திகு தீதீ செக செக
சோதீ நடமிடு — பெருமாளே

'நிர்த்த செகஜோதி — பெருமாளே'

"கொண்ட நடனம் பதம் செந்திலிலும் எந்தன்முன்
கொஞ்சி நடனம் கொளும் — கந்தவேளே"

சூரசம்மாரப் போர்க்களத்தில் "அவுணர் புறங்காட்டி ஓடுமாறு தனது குடையைச் சாய்த்து வேலவன் ஆடிய திரு நடனம் குடைக் கூத்து. சூரபதுமன் வேற்றுருக் கொண்டு கடலில் நின்றபோது அவனது வஞ்ச விளையின் வன்மையை மாற்ற அக்கடலின் அலைகளின்மேலே நின்று கால் சிலம்பு கலகலகலென, உடுக்கை ரரர ரரரவென ஒலிக்குமாறு துடி கொட்டி ஆடிய திருநடனம் துடிக்கூத்தாகும். இதன் விரிவு பாம்பனடிகளது ஸ்ரீ சுப்பிரமணிய வியாசத்தில் காண்க. ஆதலின் ஐந்தொழில் கூத்து, குடைக்கூத்து, துடிக் கூத்து முதலியவை வல்ல குமரமூர்த்தி நடச்சிவம் எனலாம்.

மற்றொரு பொருள் :

நடமாடும் சிவனாகிய நடராசனுக்கும் தலைவனான சேயவனுக்கும் வணக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். சுவாமி என்பது சிவனாரையும், அவருக்கு உபதேசித்த தலைவன் (நாதன்) சுப்பிரமணியனாதலின் சுவாமி நாதன் என்ற திருநாமமும் வழங்குவது இக்கருத்தையே வலியுறுத்துவதாகும்.

ஈகையரைச் சார்நதார்க்(கு,) எனறும் வறுமையிரா ;
வாகையர்கள், அன்னார் வழிசார்ந்து வாழ்பவரே.

திரிசிராப்பள்ளி

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

சத்தி பாணீ நமோநம முத்தி ஞானீ நமோநம
 தத்வ வாதீ நமோநம விந்துநாத
சத்து ரூபா நமோநம ரத்ந தீபா நமோநம
 தற்பர தாபா நமோநம என்று பாடும்
பத்தி பூணு மலையுல கத்தின் மானுர் சவாதகில்
 பச்சை பாடீர பூஷித கொங்கைமேல் வீழ்
பட்டி மாடான நாளுனை விட்டிராமே யுலோகித
 பத்ம சீர்பாத நீயினி வந்துதாராய்;
அத்ர தேவா யுதாசுர ருக்ர சேனு பதீசுசி
 யர்க்ய சோமாசி யாகுரு சம்ப்ரதாயா!
அர்ச்ச னுவாக னுவய லிக்குள் வாழ்நாய காபுய
 அக்ஷ மாலா தராகுற மங்கைகோவே
சித்ர கோலா கலாவிர லக்ஷ்மி சாதார தாபல
 திக்கு பாலா சிவாகம தந்த்ரபோதா!
சிட்ட நாதா சிராமலை யப்பர் ஸ்வாமீ மகாவ்ருத
 தெர்ப்பை யாசார வேதியர் தம்பிரானே!

(பதவுரை) (அத்ர............சம்ப்ரதாயா!)

அத்ர தேவ ஆயுதா - அஸ்திர தேவரையே ஆயுதமாக உடையவனே!

சுரர் உக்ர சேனு பதீ - அமரர்க ளாகிய உக்ர சேனைகளின் அதிபனே!;

புனிதமிகு நல்லோரில், புண்யமணம் வீசும்;
மனிதமனம் கொண்டவர்கள், தாமறிந்த மாண்பிதுவே.

சுசி அர்க்ய சோமாசிய - தூய (படையலிட்டு, மந்திர) நீர் இறைத்து, சோமரசம் தரும் (முன்னேற்ற) வேள்விகட்கு முதல்வனே !

குரு சம்பரதாய - (வழி முறையாகக்) குருசம்பிரதாயத்தை வளர்த்தவனே !;

(அர்ச்சனா...........மங்கை கோவே !)

ஆவாகனா - (அழைப்பார் அன்பை ஆவலித்து,) எந்த மூர்த்தத்திலும் எழுந்தருள்பவனே !;

அர்ச்சனா - (இன்பமாக) அர்ச்சனையை ஏற்பவனே !;

வயலிக்குள் வாழ் நாயகா - வயலூர்த் தலத்தில், வாழுமாறு (உயிர்கட்கு) வழிகாட்டுபவனே !;

புய அட்ச மாலா - தோள்களில் (தனிப்பெரும்) உருத்திராக்க மாலையைத் தரித்தவனே !;

குற மங்கை கோவே - குறவர் குல வள்ளி கணவனே !

(சித்ர கோலாகலா..........போதா !)

சித்ர கோலாகலா - அழகும் ஆரவாரமும் அமைந்தவனே !;

விர லக்ஷ்மி சாதா - வீரத் திருவான உமை யம்மையிடம் (இருந்து) உதித்தவனே !;

ரதா - இன்ப அனுபவத்தில் இணைபவனே ,

பல திக்கு பாலா - பல திசைகளையும் பரிபாலிப்பவனே !;

சிவாகம தந்த்ர போதா - சிவ ஆகம அருள் நூற்களை, (புனித சூட்சுமமாகப்) போதிப்பவனே !

(சிட்டநாதா...........தம்பிரானே !)

சிட்ட நாதா - (தனிப்பெரும்) சிஷ்டாசாரத் தலைவனே !;

சிராமலை அப்பர் ஸ்வாமி - திரிசிராமலை (தாயுமானார் எனும்) அப்பர்க்கு ஆசாரியன் ஆனவனே !;

நீதி நெறியுணர்ந்து, நேர்மைவழி வாழ்கின்றார்
வீதிவழி சென்றாலும், வியன்மிகுந்த புண்ணியமே.

மகாவ்ருத் தெர்ப்பை ஆசார வேதியர் தம்பிரானே - சிறந்த விரத சீலத்துடன், (கையினும்) தர்ப்பைகளைக் கைக் கொண்ட, பெரும் வைதிக அந்தணர்களைப் பிரியாதவனே !;

(சத்தீ பாணீ............வந்து தாராய் !

சத்தி பாணீ நமோநம - (ஞான) சக்தி கரத்தனே ! நம ஓம் நம :

முத்தி ஞானீ நமோநம - மோட்ச ஞான முதல்வனே நம ஓம் நம :

தத்வ ஆதீ நமோ நம - (உள் பொருளாம்) முதன்மைத் தத்துவ முதலாளியே ! நம ஓம் நம ;

விந்து நாத சத்து ரூபா நமோ நம- ஒளி ஒலி (எனும் விந்து நாதங்) களில் இருந்து உதயமாகும் மெய்யான திரு மேனியனே ! நம ஓம் நம :

ரத்ந தீபா நமோ நம - (வித்தக) மாணிக்க விளக்கான வனே ! நம ஓம் நம :

தற்ப்ர தாபா நமோநம - இயல்பாக எழுந்த புகழாளா ! நம ஓம் நம :

என்று பாடும் பக்தி பூணமலே - என்றெல்லாம் பஜனை செய்யும் அன்பை அணிகலனுக் கொள்ளாமல் ;

உலகத்தின் மானர் - மான்போல் மருளும் உலக மாதர் களின் ;

சவாது அகில் பச்சை பாடீர பூஷித கொங்கைமேல் வீழ் - ஜவ்வாது, அகில், பச்சைக் கற்பூரம், சந்தனம் முதலிய கூட்டு மணம் குலாவும் குயங்களின்மேல் (வேகமான மோகத்தில்) விழுகின்ற ; (வீழ்தல் - விரும்புதல்.)

பட்டி மாடு ஆன நான் - மாபெரும் திருட்டு மாடு ஆகிய அடியேன் ;

உனை விட்டு இராமே - உன்னை (என்றும்) நீங்கி யிராமல் ;

நாய்ப்பாலை நாய்விரும்பும் ; நற்குணமில் லார்உதவி
தாய்ப்பால்போல் வந்தாலும், தாம்மறுப்பார் தக்கோரே.

உலோக இத பத்ம சீர்பாதம் நீ இனி வந்து தாராய் - (அருளின்பத்தை) உலகிற்கு அளிப்பதான திருவடி தரி சனத்தை, நீ இனியேனும் தந்தருள வந்தருள், (எ - று).

விரிவுரை

நித்திய விழா, நாள்தோறும் நிகழ்வது; நைமித்திகம் எனும் ஆண்டு விழா, பிரமோற்சவம் எனப் பெறும்.

நித்ய ஆராதனை, நம்பர் ஆலயத்துள் நடைபெறும்.

நைமித்திகத்தில், புனித அஸ்திர தேவர், முதலில் புறப் படுவர். மாட வீதிகளை வலம் வருவர். அதன் மூலம், எவர்க்கும் தெய்வ நினைவை எழுப்புவர்,

அதன்பின், மூர்த்திகள் வீதிவிழாக் கொள்வர். எந்த மூர்த்திகட்கும், அஸ்திர தேவர் வேறு வேறு உளர்.

குமரா! நீர் தொடுவது வேல்; விடுவது வேல்: அஸ்திர தேவரும் உமக்கு வேலாக அமைந்த அருமையே அருமை! அதை யறிந்து,

'அத்திர தேவாயுதா, என்று, உலகம் உம்மை அழைக்கிறது.

அமுதம் உண்டவர் அமரர். அதனால், இறவாத் தன்மை எய்தினர். அவர்கள் உமது படைவீரர்கள் ஆகியுளர். அதர்மம் தலையெடுத்து அராஜகம் விளையாதபடி, மேலான உமது கட்டளையை மேற்கொண்டு, அவர்கள் ககனமெலாம் உலவிக் கடுமையாகக் காவல் செய்கின்றனர். அதனால், 'சுரர் உக்ர சேனபதீ' என்று, கூவி உலகம் உம்மைக் கும்பிடு கின்றது.

சோமலதை என்பது, ஒருவகைக் கொடி. அதன் பூண்டு அஃதிக காரம் ஆனது. வானவரை மந்திர நீரால் மகிழ்வித்து, பெருக்கமான சோமலதையைப் பிழிந்திட்டு, மேம்பாடு விளைய நிகழ்த்தும் சோமயாகம் மிக வுயர்ந்தது.

பொன்னை உருக்கிப் பொசுக்கி அடித்தாலும்,
தன்பெருமை குன்று; அஃதேபோல் தக்கோரே.

சொலற்கரிய இவ்வேள்வி பல செய்தவர் சோமாசி, மாற நாயனார். இத்தகைய வேள்விகளைக் கண்ணும் கருத்துமாகக் காப்பவர் நீர்; அதனை யறிந்து, 'அந்தண்மறை வேள்வி காவல்காரா' என்று முன்பொரு சமயம் ஓதியுளன். 'சுசி அர்க்ய சோமாசியா' என்று, இன்றும் புகழ்ந்து உம்மைப் போற்றுகிறேன். (சோமாசியன் - சோமலதை கொண்டு செய்யும் தனிப்பெரும் வேள்விக்குத் தலைவன்.)

சனகாதியர் முதல், பலர்க்குக் குருவானார் சங்கரர். அப்படியே பலரை மாணவர் ஆக்கினர் பரந்தாமர். நான்கு வாயாலும் பேசும் குருவானார் பிரமதேவர். பெருகிய இமையவர் குரு பிருகஸ்பதி. அசுரர்க்குக் குரு வெள்ளி. இங்ஙனம் பலர், காலந்தோறும் குருமுகம் கொண்டனர்.

அகங்காரம் அழிந்தது இல்லை. சிறந்த உபதேசம் மட்டும் சித்திக்கிறது. சிறக்கச் சாதனை செய்வதும் இல்லை. எண்ணம் மட்டும், எல்லாம் அறிந்ததாக எழும்பிக் குதிக்கிறது. வாழ்நாள் எல்லாம் வீழ்நாள் ஆகி, இத்தகையோரால் விளைந்த பரிபவம், படிக்கப் புகுந்தால் அது ஒரு பாரதமாகும்.

நாலு வாயாலும் நான் மறை ஓதி, அனுபவத்திற்கு அயலாகி, அகங்கரித்து இருந்த அயனை, குட்டிச் சிறையில் இட்டனை. எல்லாம் அறிவேன் எனும் எண்ணத்தை அழித்தனை; எதுவும் அறிந்திலன் எனும் நினைவை எழுப்பினை; அதன் பின், ஓம் பொருள் நுட்பத்தைச், சிவ முகமாகக் கூறுது குறிப்புணர்த்திய குருவான உம்மை, 'குருசம்ப்ரதாயா!' என்று, கூறி உள்ளம் குதுகலிக்கின்றதே!

சிற்ப விதிப்படி, சிலைகள் அமையும். அதன்பின் சில அரிய சடங்குகள். பிறகு ஸ்தாபனம் ஆகும். வைதிக வேள்விகள், விறுவிறுப்பாக விளையும். இறுதியில் கும்பாபிஷேகம்.

காய்ச்சிய பாலை,மத்தால் குழம்பக் கடைந்தாலும்,
வாய்ச்சசுவை குன்று; அஃதேபோல் வாய்மையரே.

எண்ணுவார் அன்பின் எண்ணப்படி, எங்குமான உம் சொரூபம், அரிய அம்மூர்த்தியில் ஆவாகனம் ஆகிறது.

முதலில் மூர்த்தம். இப்போது மூர்த்தி. மூர்த்திமான். இவைகளை எண்ணும் போதே, பெரும! இதயம் நெகிழ்கிறது துரையே!

அலங்காரம், நைவேதனம், அடுத்தடுத்து நிகழ்பவை. அதன்பின் அர்ச்சனை.

அர்ச்சனு! ஆவாகனு! என்று, உணர்ந்து போற்றி உருகும் எம் உள்ளம்.

இராஜ கம்பீர வளநாட்டைச் சார்ந்தது வயலூர். அருண கிரீ! 'பாடும் பணியே பணியா' இரு என்று, எமக்கு நீர் பணி கற்பித்த பழந்தலம் அது. பாடும்வரை ஆகாமிய பாவம் இரா.

பாட்டின் பொருள் உணர்ந்து பாடப் பாட, அப் பொருளான நீர், ஓதுவார் உளம் புகுந்து உறவாடுகின்றீர்! நான் வேறு நீ வேறு எனுத அபேத பாவனையை அருள்கிறீர்.

இப்படி எல்லாம் வழிகாட்டி வாழ்விக்கும் உம்மை, 'வயலிக்குள் வாழ் நாயகா!' என்று, வழுத்துகிறது மனம். (நாயகன் - நடத்துபவன்.)

பிரமர்களது தலைகளை மாலையாகத் தரித்தவர் சிவபிரான்; உருத்திராது கண்மாலை தரித்த தோளர் நீர். அதனுல்தான்,

'புய அக்ஷ மாலா தரா' என்று, புனித ஆர்வம் கொண்டு உம்மைப் புகழ்கிறேம். (உருத்திர அக்ஷம் என்பதில், அக்ஷம் மட்டும் நின்றது; இது 'முன்மொழி கெட்ட பின்மொழி நிலையல்' எனும் இலக்கணத்தில் அடங்கும். மாலாதரன் - மாலை தரித்தவன்.)

வைதிக ஞான வேலர், வைதிக சேனை அதிபர், வைதிக வேள்வித் தலைவர், வைதிக குரு சம்பரதாயர், வைதிக அர்ச்

மோது வினைவந்து முற்றுகை யிட்டாலும்,
ஏதமுறுர் மேலோர்கள், இன்புற் றிருப்பாரே.

சுரு ஆவாகனர், வைதிக நாயகர், வைதிக ருத்ராட்ச மாலையர் ஆன நீர், குறமங்கை கொண்கர் ஆயினீர் எனில், அதனில் ஏதோ ஒரு நுட்பம் இருக்கத்தான் செய்கிறது.

அவதாரம் என்பது, ஒரு அருள் நாடகம். வரத முருகனும், வான் மகளும் மான் மகளும், அதற்கு முன்னும் இருந்தனர். அத்தன் இடையிடை சில ஆடல் நிகழ்த்துவன். அவைகளுள் ஒன்று, மான்மகளை மணந்த வரலாறு.

அழகொடு பிறந்தேன்; அறிவொடு வளர்ந்தேன்; அன்பிற் சிறந்தேன்; அத்தன் என்மேல் ஆர்வம் அதிகன்; இத்தனைக்கும் மாறானவள் நீ என்று, அமுதவல்லியை சுந்தரி வைதாள். அது கேட்டு நாணி அமுதவல்லி நடுங்கினர்.

சுந்தரீ! ஏறுமுகம் ஆனநீ, அடுத்தாளை அவமதித்த அவலத்தால், இறங்குமுகம் ஆயினை. உன்போல்பவர், மிருக கருவில் இருக்க உரியவர்; மானுட சட்டை வாய்க்கும். ஆயினும், மறவர் மதியில் வளர்வை நீ என்று வாய் மலர்ந்தான் வரத குமரன்.

அதன் பயனாகச் சுந்தரி, மான் வயிற்று மகளாகி, மறவர் குலத்தில் வளர்ந்தார்.

இறைவன் இருபுற தேவியர், அமல விமல அனுபவ நிலையினர். அத்தகையர் மனநிலையில் மாறுபாடு விளைவித்து, தவறுடையார் தண்டனை யடைவர் என்னும் தர்ம சூட்சுமத்தை அறிவித்தான் அறுமுக தற்பரன்.

சிவனார் திருமேனி நிழல் சுந்தரர். அநிந்திதையும் கமலினியும், தேவி திருமேனி நிழலினர். இயல்பான அவர்கள் இதயத்தில் காமத்தை ஏற்றி, இத்தகையர்க்கு இங்கு இடமில்லை; பூலோகந்தான் புகலிடம். சென்மின்கள் என்று, அவர்களை நிலவுலகிற்கு அனுப்பிவைத்த நிமலர், 'அரவகல்

காரணமே இல்லாமல், கண்டவுடன் பகைக்கப்
பாரிற் பலருளரால்; அன்னதுநம் பாவமரோ?

அங்குளர்பால் ஆசை 'நீத்தவர்க்கே வீடு' எனும் அரிய சூட்சுமத்தை, அவர்கள் மூலம் ஆன்மாக்கட்கு அறிவித்தார்.

பரவை சங்கிலியார் சுந்தரர் மூவரும், போக ரூபத்தில் யோகர்கள் ஆயினர். உலகர் அதை உணர்ந்தபின், அவர்களைக் கயிலைக்கு அழைத்தார் கண்ணுதலார்.

அதுபோல் மான் மகளாகி மறவர்பால் வளர்ந்தாலும், பூர்வ வாசனைப்படி, முருக முருக! முருக முருக என்று, புந்தியில் பரனை வள்ளியார் போற்றி யிருந்தார். உலகம் அதை உணருமாறு உணர்த்தியபின், அவரை வலிந்து ஆண்டான் நம் ஆண்டவன். விரிவாக இவ்வரலாற்றை புராணம் விவரிக்கின்றது.

இந்த அருமையை அறிந்தே, 'குறமங்கை கோவே!' என்று கூவிக் குதுகலிக்கிறது எமது மனம். (மங்கை - பரிபக்குவ அறிவிப்பு. கோ - பதி.)

பூத ராஜர்கள், இரண்டாயிரம் பூத வெள்ளங்கள், இலட்சம் வீரர்கள், நவ வீரர்கள் நடுவில், அயில் ஏந்தி மயிலேறிய சௌந்தர்ய சிகரமான சந்நிதானம், அதிக ஆடம்பரமான அனுபவம். ஆம். அது கருதித்தான், 'சித்திர கோலாகலா' என்று, இறைஞ்சி உம்மை எண்ணுகிறோம்.

அலைமகள் ஆனார் திருமகளார். கலைமகளானார் பாரதியார். மலைமகளான பரமேஸ்வரி, வீரமகள் ஆகி விளங்குகிறார். அவரில் இருந்து மலர்ந்த உம்மை, வீரலட்சுமி ஜாதா என்று அழைத்து வணங்கும் அறிவுடையம் யாம். (ஜாதா - உதயமானவன்.)

ஐம்புலன்கட்கு விருந்தான இன்ப கோல எந்தையே! உம்மை ரதா என்று விளிக்கும் போதே, உள்ளம் நெகிழ்ந்து உருகுகின்றதே!

கற்றார்க் கழகு, கருணையே; பாசபந்தம்
அற்றார்க் கழகு, பொறுமை அறிதியரோ.

பத்துத் திக்கிலும் வாழ்கின்றார் பலர் எனில், அவர்கட்கு இடையூறு ஒன்றும் நேராதபடி, பரிபாலிப்பது நீர்தானே!

பல திக்கு பாலா என்று அடியார் உம்மை அழைப்பதில், புனித அனுபவம் பல பொருந்தி யுளதே!

காமிகம் முதல் வாதுளம் ஈறாக, இருக்கும் ஆகமங்கள் இருபத்தெட்டு. அவைகளை ஓதுவது வேறு, உணர்வது வேறு. அகத்தாலும் தூயவர். புறத்தாலும் வாய்மையர். அவர்கள்தம் புனித வுளத்திற் புகுந்தீர். உணருமாறு அவைகளை உணர்த்தினீர். இந்த அருமையை அறிவாரும் இல்லை! அறிய முயல்வாரும் இல்லையே! இதை யாரிடம் சொல்லி ஆறுவது? 'சிவாகம தந்த்ர போதா' என்று சொல்லச் சொல்ல, உள் நாவில் நீர் ஊறுகிறதே!

சிட்டனே சிவலோகனே! என்று எட்டாந் திருமுறை, சிவத்தைச் சிந்திக்கச் செய்கிறது.

சிட்டர் - மேதகு ஒழுக்க மேன்மையர். அத்தகைய பெரு மக்கட்கு எல்லாம், நீர்தானே அதிபர். அதனால்தான், சிட்ட நாதா! என்று, உம்மைச் சிறந்த மேலவர் சிந்திக்கின்றனர்.

திரிசிரன் வழிபட்ட இடம், திரிசிரமலை. இப்பதியில், தந்தையான தற்பரர், தாயும் ஆயினர். அந்த அப்பர்க்கும் குருஸ்வாமி ஆன உம்மை, சிரமலை அப்பர் ஸ்வாமி என்று, வினயம் மிகுந்து விளிக்கின்றோம்.

வைதிக தர்மம் வழுவாதார். கட்டிய தர்ப்பையைக் கரத்தில் கொண்டவர். ஓயாது வேதங்களை ஓதினோர். ஓதி ஓதி, வேதம் வேறு தாம் வேறு என்று ஆகாமல், அவர்கள் வேதியர் பெயர்பெற்று விளங்குகின்றனரே!

உத்தம அவர்களது உள்ளம் பிரியாத உம்மை,

'மகாவ்ருத, தெர்ப்பை ஆசார வேதியர் தம்பிரானே!' என்று, அன்பால் என்றும் அடியேம் அழைபபம்.

கண்டிப்பாம் பேச்சும், கருணை மனமுமுள
அண்டர் உறவு, அவனிக்கு நல்லதரோ.

என்னைத் தங்க சூரன்வேல் ஏந்திய உம்மை; நமஸ்காரம் ஓம் நமஸ்காரம் எனும் பொருளில், 'சத்தி பாணீ நமோநம' என்று ஓதவேண்டும். (பாணி - திருக்கரம்.)

பந்தத்தில் இருந்து விடுவிப்பவனே! ஞானத்தை விளை விப்பவனே! வணக்கம், ஓம் வணக்கம்.

முத்தி ஞானீ நமோநம'

தொண்ணூற்றாறு தத்துவங்களும், உம்மில் இருந்து உதிக்கும். உமது அருள் நிழலில் ஒடுங்கும்; உள்பொருளான அவைகளில் உள்ளவனே! போற்றி ஓம், போற்றி.

'தத்வ ஆதீ நமோநம'

95-ஆம் தத்துவம் விந்து; 96-ஆம் தத்துவம் நாதம். இந்த இரண்டுமான திருமேனி தாங்குவோனே! உமக்கே நமஸ்காரம் ஓம் நமஸ்காரம்.

விந்து நாத சத்து ரூபா நமோநம

"எந்தனுள் ஏகசெஞ் சுடராகி, என்கணில் ஆடு தழல் வேணி எநதை" தந்த மாணிக்க விளக்கான உமக்கே அடைக்கலம்! ஓம் அடைக்கலம்.

'ரத்ந தீபா நமோநம'

வளரும் சிறப்பு, உழைப்பால் வருவது; அது, பலர் கை கொடுக்கப் பரிணமிப்பது; எனினும் அப்புகழ், இருந்து சில நாளில் மறைந்துவிடும். உமது புகழோ சுயமாக உருவாவது; அதுஎன்றும் நிலைப்பது. தற்ப்ரதாபா நமோநம என்று, அடைக்கல பாவனை வெளிப்பட, உம்மை அர்ச்சிப்பதுதான் அறம்.

'அர்ச்சனை பாட்டே ஆகும்' என்கிறது பெரியபுராணம். இப்படிப் பாடி அர்ச்சிக்கும் பக்தர்களே, உமது அருளால் உயர்பவர் ஆகின்றார்.

பொருளும் அருளும், புனிதமென்று கொள்ளும்
தெருளுடையார் நட்பைத், தினந்தோறும் தேடுவமே.

அடியேனோ, பலவகை வாசனைத் திரவியங்களால், கமழ கமக்கும் நாரியர் குயங்களில் நாட்டம் கொள்கிறேன்.

பிறந்தபின், உடல் வளர பால் சுரந்த இடம் அந்த இடம் என்று கருதிலன். வாசனையை மோந்து கொள்கிறேன். மயங்கிச் சாய்கிறது மதி.

பட்டிமாடு, உத்தமப் பசுக்களோடு ஒருமித்துப் போகாது. அழிவு இது என்று அறியாது. பசுமை கண்ட இடமெல்லாம் பாய்ந்து ஓடும். அடியும் படும். சிறையிலும் அடைபடும். அதன் முட்டாள் தனத்தை அறிந்து, கழுத்தில் ஒரு கட்டையை உரியான் கட்டுவன். ஓடும்பொழுது, கழுத்துக் கட்டை முழங் காலை யிடிக்கும். உபாதையால் உடல் சிலிர்க்கும். இப் படியே பட்டுப் பட்டுப் புத்தி வந்து, வழியே ஏகும்; வழியே மீளும்.

ஆ ! இதுதானு வாழ்க்கை !! இல்லறம் என்பது, கழுத்துக் கட்டைதானு? அதுகொண்டு பந்தித்தவன் பசுபதிதான். அந்த வாழ்க்கையிலும் சபலமெனில், ஆயிரம் துன்பமும் அவசியந்தான். என்றும் உம்மைப் பிரியாது இருந்தால், இந்த சங்கடம் இல்லையே! வா ஐயா! இதமான இன்பம் தரும், நின் சீர்பாத சேவையைத் தா ஐயா! இனியேனும் தா ஐயா ! ஐயா ! என்று அலறியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்,

அன்புற் றளிப்பேம்; கைஏந்த மாட்டேம்;
இன்புற் றிருப்பேம் என்றிருப்ப(து) இல்லறமே.

தகுதி உண்டா ?

[கி. வா. ஜகந்நாதன்]

ஊதியம் பெறவேண்டும் என்ற ஆசை மனிதர் யாவருக்குமே இருக்கிறது. அதற்கு நம்மிடம் என்ன தகுதி இருக்கிறது, நாம் எந்த எந்த வகையில் அதற்காக உழைத்தோம் என்று தம்மைத் தாமே சோதனை போட்டுக்கொள்வார் பெரும்பாலும் இல்லை. எனக்கு அது கிடைக்கவில்லையே, இது கிடைக்கவில்லையே என்று குறைபட்டுக் கொள்வதே மனிதனது இயல்பாகிவிட்டது. அது மாத்திரம் அன்று. 'அவனுக்கு அது கிடைத்திருக்கிறதே; எனக்குக் கிடைக்கவில்லையே' என்று பொறாமைப் படுவதும் மனிதனுக்கு வழக்கமாகப் போய்விட்டது.

இறைவன் நம்மிடம் 'பட்சபாதமாக இருக்கிறான் என்று கூடச் சில சமயங்களில் நினைக்கிறோம். "ஐயோ! கடவுளுக்குக் கண் இல்லையா ?" என்று கேட்பவர்கள் பலர். கடவுளின் பேரருளை உணரமாட்டாத நமக்குத்தான் கண் இல்லை. அவன் எப்போதும் நம்மைக் கவனித்துக் கொண்டே இருக்கிறான்.

இறைவன் நமக்கு அது தரவில்லை, இது தரவில்லை என்று குறை கூறுபவர்கள் அவனால் நமக்குக் கிடைத்த நலன்களை எண்ணிப் பார்க்கிறார்களா ? ஒரு செல்வன் நூறு ரூபாய் கையில் வைத்திருக்கிறான். ஓர் ஏழை அவனிடம் வந்து இரக்கிறான். செல்வன் மனம் இரங்கித் தன் கையில் இருந்த நூறு ரூபாயில் தொண்ணூறு ரூபாயை அந்த ஏழைக்குத் தந்துவிட்டுக் கையில் ஒரு பத்து ரூபாய் நோட்டை மாத்திரம் வைத்திருக்கிறான். தொண்ணூறு ரூபாய் பெற்றதற்காக அவன் பெறும் மகிழ்ச்சியைக் காட்டிலும், "அந்தப் பத்து

பேயியல், பித்தரியல், சேய்இயல் பேணுகின்ற
வாய்மையியல், ஞானிகட்கு வாய்த்தவியல் என்றறியே.

ரூபாயையும் தரவில்லையே!'' என்ற குறையே மேலோங்கி நிற்கும். இது மனித இயல்பு.

இந்த வகையில்தான் கடவுள் செய்துள்ள நலன்களை அடியோடு மறந்து, நமக்குக் கிடைக்காதவற்றை எண்ணிக் குறைப்படுகிறோம். இந்த அற்புதமான மனித சரீரத்தை இறைவன் தந்திருக்கிறான். இந்தப் பெரிய உபகாரத்துக்கு ஈடும் இல்லை, எடுப்பும் இல்லை. இதற்காக நாம் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவதில்லை. நம்மை மன்மதனைப்போல இன்னும் அழகாகப் படைக்கவில்லை என்ற குறை நமக்கு உண்டாகிறது. நமக்கு உள்ள செல்வ நிலையைக் கண்டு மகிழத் தெரிவதில்லை. நம்மினும் வறியவர்களைக் கண்டு, அவர்களைவிடச் சிறந்த நிலையில் நம்மை இறைவன் வைத்திருக்கிறானே என்று எண்ணி மகிழலாம். அதை விட்டுவிட்டு நம்மினும் மிக்கசெல்வம் உடையவர்களைப் பார்த்துப் பார்த்துப் பொறுமைப் படுகிறோம்.

நாம் பெறுமற்போன பொருள்களைக் கண்டு அவை கிடைக்கவில்லையே என்று ஏங்கத் தெரிந்த நமக்கு, வேறு ஒரு வகையில் பிறரைக் கண்டு ஏங்கத் தெரிவதில்லை. நம்மினும் குணம் சிறந்தவர்களாக இருப்பவர்களைக் கண்டு, நமக்கு அந்தக் குணம் இல்லையே என்று ஏங்கவேண்டும். தன் குற்றத்தை நன்கு தெரிந்துகொள்வதே ஒருவகை ஞானம்.

''ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்று கேட்கிறார் திருவள்ளுவர்.

நம் குணங்களைப் பெரியனவாக எண்ணித் தருக்கு அடைவதும், பிறர் குற்றங்களைப் பெரியனவாக்கி இகழ்வதும் நம் இயல்புகள். தம் குற்றத்தைப் பெரிதாக எண்ணி மனம் அழிவதும், பிறர் குணத்தைப் பெரிதாகக் கொண்டு போற்று

உயர்ந்தோர்கள் கற்றால், உலகிற்கு உபகாரம்;
அயர்ந்தோர்கள் கற்றால், அழிவு பெருகுமரோ.

வதும் பெரியோர் இயல்புகள். நம் குற்றங்களை நாமே ஆராய்ந்து பார்த்துத் தெளிவு பெற்ருல், இந்த அளவுக்கு நாம் நலம் பெறுவதற்குக் காரணம் இறைவனுடைய பெருங் கருணையே என்பதை உணரலாம். எத்தனை பிழைகள் செய்தாலும் பொறுத்து நமக்கு வேண்டியவற்றைச் செய்யும் பேரருளாளன் இறைவன்.

பலரை இகழ்ந்து அடியார்களைக் குறைகூறிப் பழகிய வாயை யுடையவனுக்கு, ஆண்டவன் உண்மையில் தண்டனை தர நினைத்தால் அவனை ஊமையாகப் பிறப்பிக்க வேண்டும். நாமும் சென்ற பிறவியில் அப்படிச் செய்திருப்போம். ஆயினும் அவற்றை மறந்து, ஏதோ ஒருமுறை இறைவனை வாழ்த்தியதற்காக அவன் இந்தப் பிறவியில் நம்மை ஊமை யாக்காமல் வாய்தந்தருளி யிருக்கிருன்.

பேரருளார்களைப்போல நாமும் பெரியவர்களாக வேண்டும் என்ற ஆசை உண்டாவதற்கு முன், நாம் எத்தனை குறைகளை உடையவர்களாக இருக்கிறேம் என்ற ஆராய்ச்சி பிறக்க வேண்டும். ஆண்டவன் அருளைப் பெறுவதற்கு நமக்குத் தகுதி யிருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன்,
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன்,
தொண்டு செய்து
நாளாறில் கண்இடந் தப்பவல் லேனல்லன்,
நான் இனிச்சென்
ருளாவ தெப்படி யோதிருக் காளத்தி
அப்பனுக்கே"

என்று பட்டினத்தார் புலம்புகிருர்.

தண்ணெளி மாணிக்கம் தானுடைய(து) என்(று,)அரவை நண்ணுவது தீ(து.) அதனை நாம்மறத்தல் நன்ருமோ.

தம்முடைய குறைகளை எண்ணி நெஞ்சம் புழுங்கி இறைவனிடம் கருணையை வேண்டுவது நல்லோர் செயல்.

" பற்பாவும் வாயாரப் பாடி யாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
[கிற்பானை "

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். இறைவன் முன் தம் குறைகளை எண்ணிப் பணிந்து புகவேண்டும்.

அருணகிரியார் அவ்வாறு தம்மைக் குறைத்துக் கொள்ளும் நைச்சியானுசந்தானத்திலே சிறந்தவர்.

" எம்பெருமானே, உன்னுடைய திருவருளிலே கலக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டாகிறது. கலப்பது கிடக்கட்டும். அதை மனத்தால் எண்ணிப் பார்க்கும் தகுதி எனக்கு ஏது ? என்னுடைய மனம் முழுவதும் பொல்லாத காமத்துக்கு ஆட்சி பீடமாகி இருக்கும்போது இப்படி எண்ணுவதற்குக் கூட எனக்குத் தகுதியில்லையே !" என்று இரங்குகிறார்.

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வேன், அருள்சே ரவும்எண் ணுமதோ ?

சுபகிருது வருட சந்தா தொகை ரூ. மூன்றையும்
இதுகாறும் அனுப்பாவிடில் கவனிக்கவும்.

அன்பர்கள் கையேந்தில், அன்னவர்தம் உள்ளிருக்கும்
இன்புருவ எம்மான், ஏந்துகிறான் என்றறியே.

சமரஸம் 1.

வாழும் வழி

(ரஸபதி)

பண்டரிபுரம் என்பது ஒரு பழம்பதி. அங்கு விஸ்வகர்ம குலதிலகர் ஒருவர். அவர் சிவபத்தியிற் சிறந்தவர். நரஹரி எனும் பெயரினர்.

வைகறையில் எழுவார். நீராடுவார். நியதி செய்வார். புனித மல்லிகேசரைப் பூசிப்பார். சித்திரான்னத்தை நிவேதிப்பார். துதிப்பார். உரிய ஐந்தெழுத்தை ஓதுவார். ஹர ஹர என்பார். பரவசப் படுவார்.

பண்டரிபுரத்தில் பிறந்தவர்தான். ஒருநாளும் பண்டரி நாதன் ஆலயத்தைப் பார்த்தறியார். வைகறை முதல், ஓயாது பக்தர்கள் வருகின்ற தலம் அது.

அவர்களது ஹரிஹரி எனும் ஓசை கேட்டால், காது இரண்டையும் கையால் மூடுவார். வைணவர்களை நிந்திப்பார். சிவனடியாரைச் சிந்திப்பார்.

கண்ணுறங்கும் தெய்வத்திற்குக் கண்ணன் என்று பெயராம். அறிதுயிலேதானே அவர் அறிந்த தொழில். அதையன்றி, அவர் வேறு எதை அறிவார்? இந்த உலகில் எத்தனையோ அதிசயம். அவைகளுள் ஒன்று, மங்கல சீதேவி அவரை மணந்து கொண்டது. இப்படியெல்லாம், அவர் மனம் எண்ணுவது உண்டு.

ஊரில் ஒரு வணிகர். அவர்க்குக் குழந்தை யில்லை என்று ஒரு குறை.

பண்டரிநாதா! புண்டரீகாட்சா! கலியுக வரதா! பிள்ளை ஒன்றேனும் பிறக்க அருள்! என் எண்ணம் நிறைவேறினால், தங்கத்தால் அரைஞாண் செய்து சமர்ப்பிக்கிறேன் என்று, வீழ்ந்து வணங்கினார். வேண்டிக் கொண்டார்.

மனமொன்றை எண்ண, வாயொன்று பேச,
இனமான செய்தொழிலில், ஈடுபடல் வேதனையே.

ஆதி மாதவர் அருளால், நினைத்த அவர் எண்ணம் நிறை வேறியது. பிறந்தது பிள்ளை. குதூகலித்தார் செட்டியார். அதை ஒரு விழாவாகவே கொண்டாடினார்.

செய்து கொண்ட பிரார்த்தனையை, செலுத்த நினைத்தார். அரிய வேலைப்பாடுடன், அதைச் செய்தளிக்கும் ஆசாரியார்? என்று, ஊரில் உள்ள ஒவ்வொருவரையும் வினவினார்.

அதற்குத் தக்கவர் நரஹரி. பொன்னகை செய்வதில் புலி. விரைந்து தருவதில் நிபுணர். தக்கவர். இரக்கம் மிக்கவர். தீராத நோயாய், மதவாதம் அவரைத் திணற வைத்து இருக்கிறது. எவ்வளவோ அறிவாளிகள், அந்நோய்க்குப் பலி ஆயினர். அவர்களுள் இவர் ஒருவர் என்றே எவரும் அறிவித்தனர்.

அவர் எப்படி இருந்தால் நமக்கென்ன! யோய்ப் பார்ப்பம் என்று, வர்த்தகர் புறப்பட்டார். நரஹரியைக் கண்டார். நமஸ்காரம் செய்தார்.

ஸ்வாமி! வாக்கைக் காப்பது என் வழக்கம். பிள்ளையில்லாக் குறைதீரப் பிரார்த்தித்துக் கொண்டேன். என் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும். இன்றேல் தற்கொலைப் பெயரால் இறந்துபோக நேரும். என் வாழ்வு, இனி தங்கள் கையில்தான் இருக்கிறது.

இதோ தங்கம். அருமையான ரத்நங்கள் இவை! பளபளக்க இவைகளைப் பதித்து, தங்க அரைஞாண் செய்து தாரும்! எவ்வளவு கூலியானாலும் சரி என்று, விநயம் காட்டி விண்ணப்பித்தார்.

அவரது மனநிலை, இதயத்தில் இரக்கத்தை எழுப்பியது.

வர்த்தகரே! அந்த ஆலயத்தை, கண்ணெடுத்து ஒரு நாளும் கண்டதில்லை. பண்டரி நாதன் திருவுருவைப் பார்த்ததும் இல்லை. சிவத்தை யன்றிப் பிற மூர்த்தங்களைச் சிந்தித்

திரிகரணம் ஒத்துச் செயல்செய்தால், நிச்சயம்
வருபயனைக் கூற, வாய்ச்சொற்கள் போதாவே.

ந்தும் இல்லை. உமது வருகையே, எனக்கு ஒரு சோதனை போல இருக்கிறது நீர் போம்! இடையை அளவெடுத்து வாரும்! செய்து தருகிறேன் என்றார் நரஹரி.

இவ்வூரிலேயே பிறந்து வளர்ந்த இவர்க்கு, இப்படியும் ஒரு பயித்தியமா! வர்த்தகர் நினைத்தார். மனத்துள் சிரித்தார்.

விரைந்தார். பெருமான் இடையை அளந்தார். கொணர்ந்து கொடுத்தார்.

குறித்த காலத்துள், அற்புத வேலைப்பாடுடன் அதை செய்து கொடுத்தார் சிவபக்தர். சிறந்த சம்பாவனை செய்து, குதூகலத்துடன் வர்த்தகர் கொண்டு போனார்.

ஆலயத்தில் அபிஷேகம், அற்புதமாக நடந்தது. ஆடைகளால், மாலைகளால், ஆண்டவன் திருவுருவம் அற்புதமாக இருக்கிறது.

அரைஞாண் வந்தது. ஆனால் நான்கு விரல் அளவு குறைந்தது. வருந்தியது மனம்.

வர்த்தகர் ஓடினார். அந்தக் குறையை நரஹரியிடம் அறிவித்தார். அப்போது கொடுத்த அளவுப்படி, மறுபடியும் சிறக்கப் பத்தர் செய்து கொடுத்தார்.

கொண்டு போனார் வர்த்தகர். இப்போது அரைஞாண், நாலு விரல் அளவு நீண்டது.

திக்கென்றது மனம். திரும்பினர் வர்த்தகர். வேதனை முகத்தில் வெளிப்பட, பத்தர் பாதங்களில் வீழ்ந்தார். அரைஞாண் மூலம், என் பாபம் அறிவிக்கப் படுகிறதோ? ஒன்றுமே புரியவில்லையே! ஸ்வாமி! தயவு செய்யுங்கள்! என்னோடு வாருங்கள்! சிறந்த தங்கள் கையால், அளவெடுத்துச் செய்யுங்கள்! என்று பொருமித் தேம்பிப் புலம்பினர் வர்த்தகர்.

பால்காய்ச்ச நீர்சுண்ட, பாலோ கொதித்தெழுந்து,
சால்புற்ற தீயைத், தணித்துவிடல் கண்டிலமோ.

நரஹரிக்குத் தர்ம சங்கடமாக இருந்தது.

ஐயா! நான் மறந்தும் புறந்தொழாதவன். தங்கள் கண்ணீர், கடின என் மனத்தைக் கரைக்கிறது. இரும் வருகிறேன் என்று எழுந்தார். எதிரில் இருந்த சீலையை எடுத்தார். கண்களை இறுகக் கட்டினார். வர்த்தகரது கையைப் பற்றினர்,

உம். வழிகாட்டிப் போம் என்ருர். அவரது வைராக்யம், அச்சத்தை வர்த்தகர்க்கு அளித்தது. விவரம் அறிந்த பலர், இடைவழியில், நரஹரியைக் குறித்துத் தம்முள் நாலாயிரம் பேசினர்.

பக்தர்கள் இருவரும், பண்டரி நாதரை அணுகினர். இவர் தான் பெருமாள் என்ருர் வர்த்தகர். நரஹரி, பரந்தாமன் திருவுருவை, பாதாதிகேச பரியந்தம் பரிசித்தார்.

என்ன அதிசயம்! ஐந்து திருமுகம். தற்பரர் சடாமகுடம் அல்லவா சிரசில் தட்டுப் படுகிறது. கங்கை அலை, ஓ என்று இரைந்தது. அவர் கரத்தை நனைத்தது. கழுத்தில் இருந்தது பாம்பணி. இடையில் புலியுடை. அலறினர் நரஹரி. உடல் சிலிர்த்தது. உளம் நெகிழ்ந்தது. பெருகிப் புளகிதம் பிறந்தது.

ஆ. இது என் தெய்வம் அல்லவா! இவ்வளவு நாளாக, இவர் மாதவர் என்றல்லவா மதித்தேன். மாதேவர் என்று அறிந்திலனே! என்ன பாவம். ஏமாந்து போனேனே என்று குரலெடுத்துக் கூவினர். இருந்த கண்கட்டை அவிழ்த்து எறிந்தார். அன்போடு நோக்கினர்.

நீல நிறம். நெற்றியில் ஸ்ரீ சூர்ணம். கவுஸ்துபம். துளசி மாலை. காதில் மகர குண்டலம். இடுப்பில் ஊன்றிய இரு கரம். இடையில் பீதாம்பரம். உபய திருவடிகள்.

ஐயோ! என்ன இது? மோசமே மோசம் என்று, இறுகக் கண்களை மூடினர். இடையில் அளவு எடுக்க, இடையைத் தொட்டார். இடத்தில் இறைவி. இருபாதி உருவம்.

தண்ணீர் தெளிக்கத் தான்தணியும் பால்போல்,
கண்ணுஞர் துன்பமுறில், கண்டுபொருர் நல்லோரே.

என்ன இது ! கண்ணைத் திறந்தார். சிரித்தார் சிவபிரான். நரஹரி ! நாரணன் நாமம், உன் உடம்பின் அடையாளமாக உறவு பூண்டது. என் உண்மை அன்பன் நீ! எண்ணிப்பார். என்னையும் திருமாலையும் வேறு பிரிக்காதே ! பொன்னும் ஒளியும்போல், யாம் பொருந்தியுள்ளம்.

இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூல மான்மழு
உடல் கலந்து நின்ற மாயம், யாவர்காண வல்லரோ '?

எல்லாம் அறிந்தவர் போல், பேத பாவம் பேசுவார். அதனால், இருந்த புண்ணியம் கரந்துவிடும். போகூழ் அறிவு போர்த்து விடும்போது, அபேத அனுபவம் தோன்றுவது இல்லை.

'அரனென்கோ ? நான்முகன் என்கோ ? அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்—முரணிய
தானவனை பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று.' (11-ஆம் திருமுறை.)

கலாதேவியின் கண்ணருளைப் பெற்று, கவிதை இதயத்துள் புகுந்தால்தான், ஆஸ்திகம் பற்றி ஓரளவு அறிந்து கொள்ள இயலும். அதன்முன், ஏட்டளவு ஞானமாய் ஏதேதோ பேசுவது, வேதனையைப் பெரிதும் விளைவிக்கும்.

யுக்தி வாதத்தை விடு! எவ்வுருவும் எம் உரு. எவர் பெயரும் எம் பெயர்.

சில சிவபக்தர்கள், 'திருமாலைப் போற்றி' வாழத் தெரிந்து கொண்டது இல்லை. திருமால் அடியார் சிலர், சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு எனும் புனித அனுபவத்தைப் புரிந்து கொண்டது இல்லை. ஆய்ந்து எதையும் அறியாமல், குயுக்தி வாதமே பேசி, புண்ணியத்தைத் குறைத்துக்கொள்வது சரி யல்ல என்றார் சிவபிரான்.

பாலானார் நல்லோர் ; தீயானார் தீயோர் ;
மேலான நீரானார், அடைக்கலமா மேவினரே.

உண்மை யுணர்ந்த நரஹரி, பிரபோ! இரு கோம்பு இடை நுழைந்து, மாதவன் மாதேவன் ஆயினன். சொல்லா லும் பொருளாலும், இருவர்தம் உருவும் பெயரும் ஒன்றி யிருப் பதை உணராது போனேன்; அதை உமது திருவருளால் இன்று அறிந்தேன். வாழி பெரும! வாழி இறைவா என்று வாழ்த்தினார். அதே நேரத்தில், புனித இடைக்கு அரைஞாண், எவரும் போற்றும் அளவிற்குப் பொருந்தியது. அச்சமயம்,

முனிவன் மூர்த்தி மூவராகி, வேதம் விரித்துரைத்த
புனிதன், பூவை வண்ணன், அண்ணல், புண்ணியன்,
[விண்ணவர்கோன்,
தனியன், சேயன், தானொருவ னாகிலும், தன் அடியார்க்கு
இனியன், எந்தை, எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே.

எனும் *திருமங்கையாழ்வார் திருப்பாடலை*, ஒரு பக்தர் தம் போக்கில் பாடினர். அப்பாடல் பொருள், நரஹரி பக்தரின் புனித உளத்துள் புகுந்தது.

தவங்கிடந்தார் சாலிகோத்திர முனிவர். அவர்க்கு சேவை தந்த எம்பெருமான், வசிப்பதற்குரிய உள் எவ்வுள் என்றான். இவ்வுள் என்றார் இருந்தவர். அன்று முதல் ஆதி மாதவர், அங்கேயே கோயில் கொண்டு அமர்ந்தார் எனபர். அந்நாள் முதல் அப்பதி, தொண்டை நாட்டில், திரு எவ்வுளூர் என்னும் பெயரை எய்தியது.

பின் வந்த மக்கள், சொல்லும் வாய்க்குச் சுலபமாக, அத் தலத்தைத் திருவள்ளூர் என்று திருத்திக் கொண்டனர்.

நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாளூதுவான், தோலா வழக்கன் எனும் தோழர்கள் துணையுடன, ஏராளமான பொருள் திரட்டி, ஆலயத் திருப்பணிக்கும், பாகவத கைங்கர் யத்திற்கும், திருமங்கையாழ்வார் பயன்படுத்திக் கொண்டா ராம். செய்வதெல்லாம் எம்பிராற்கு என்று செய்து, ஏராளமான

அணமில் சுடும்தீ; அடியார்பொருள் வெந்நெருப்பாம்;
எண்ணு(து) எடுத்தாரை, எங்கும்போய்ச் சுட்டிடுமே.

பாமாலைகளால், அம்மானை அலங்கரித்த அவரது கருத்து ஆழமானது. பாடல் கருத்தை, இனி ஒரு சிறிது பார்ப்போம்.

உலகம் இப்படி உருவாக வேண்டும் என்று, முகுந்த முதல்வன் முன்னினன். (முன்னுதல் - சங்கல்பித்தல்.)

ஊழ்க்குத் தக்கவாறு உடல் தர, நான்முகனைத் தன்னையே நாட்டினன்.

படியளந்து பாதுகாக்க, பிறகு அப் பகவான் பரந்தாமன் ஆயினன்.

வாழும் வழிமுறை மறந்த உயிர்கள், பிறந்து இறந்து பெருந்துயர் அடைய, இரக்கம் கொள்ளும் எம்மான், என்றும் உயிர்களை இளைப்பாற்ற எண்ணி, சிவம் எனும் பெயருடைய மூன்றும் முதலாளி ஆகின்றான்.

'முனிவன் மூர்த்தி மூவர் ஆகி'

ஆ! அவன் செய்யும் மாபெரும் உதவியை மறக்க முடியுமோ ?

விதி விலக்கறிந்து உயிர்கள் வாழ, வேதங்கட்கு விரிவுரையும் செய்கின்றான். அவனுக்கு அயலாய் எதுவும் இல்லை. அவனே உலகம். அவனே யாவும். அவன் தனியன்.

அவனைப் பிரமன் என்று அறிகிறபோது, திருமாலாகித் திகழ்கின்றான். திருமாலேதான் என்று தீர்மானிக்கும் போது, சிவனு யிருந்து சிறக்கின்றான். இந்த அபேத நிலையை அறியாதார், என்றும் எதையுமே அறியாதார்.

உணர்விற்குப் புறம்பாக்கி, விபரீத மத வாத விளைவை எழுப்பி, விதி இடைப்புகுந்து விளையாடும் பரிபவத்தை எவரிடம் சொல்லி ஆறுவது ?

ஆஸ்திக வாழ்க்கையில் அமைதி கிடைக்கும். அதற்கு மாறாகி, பயனுணது எம் சமயம்; அயலவர் சமயம் அவலம் என்று ஆரவாரித்து, ஒற்றுமை குறைந்து, உள்ளம் ஒன்றி

பனையின்கீழ் நின்றுகொண்டு பாலே பருகினும்
இனையமது என்றே எள்ளுமிந்த மாநிலமே.

உறவு கொளாமல், பேதங் கொண்டு பிரிவு படுத்தி, தம் கொள்கைக்கு ஏற்ப வித்தகப் பாசுரங்கட்கு விரிவுரை செய்து, இருளைப் பெருக்கி, பிறர்க்கும் இடர் தருகிறது உலகம் எனில், கடவுளர் பெருமான்தான நமக்குக் கைகொடுக்க வேண்டும்.

மனப்பட்ட வடிவை மனனம் செய்வம். எவ்வுருவும் எப் பெயரும் ஏகம் என்று எண்ணுவம். ஏத்துவம். வாழ அதுதான் வழி.

ஓம்.

---

6. நக்கீரர்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

[அந்தமில்சீர் நக்கீரர் அடியார்க்கும் அடியேன்]

எல்லாவித மங்களமும் நிறைந்து பொலியும் திருநகர் மதுரை.

"ஒருவினை யாடலை ஓதும் அன்பர்தம்
கருவினை யாடலைக் காயுங் காரணன்
அருவினை யாடல தாம்எட் டெட்டெனுந்
திருவினை யாடல்கள் செய்த மாநகர்"

என்று சேய்த்தொண்டர் புராணம் [199] இத் திருநகரின் சிறப்பை எடுத்து ஓதும். இத் திருநகரில் முருகவேளின் மெய் யடியார் கனக்காயர் என்பார்; அப்பெருமானது திருவருளால் அவர்க்கு அழகு நலம் சிறந்த ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு 'நக்கீரர்' என்று பெயர் சூட்டப்பட்டது.

பழிப்படையா நல்லோர், பழியினர்தம் நட்பால்
விழிமருண்டு, மனம்திகைத்து வீழ்ந்தகதை எத்துணையோ ?

"அற்கீறி வகத இளஞாயி றழகெறிக்குஞ்
சிற்கோல மைந்தர் திருமேனியின் தேசுநோக்கித்
தற்கோலி நின்ற பெரியோர்களுந் தந்தைதாயும்
நக்கீர தேவர் எனச் சூட்டினர் நல்ல நாமம்"

என சேய்த் தொண்டபுராணம் [237] கூறும்.

இந் நக்கீரர் கந்தவேள் திருவருளால் கல்விநலம் மிகச் சிறந்து பாண்டியன் அவைக்களத்தில் இருந்த சங்கவாணர்களின் தலைவராய்ப், பரணர், கபிலர், பெருந்தேவனார் இவர்களெல்லாம் இவருடைய கல்வித் திறத்தை வியந்து உடனிருக்க, நடுநாயகமாய் விளங்கினர்,

2. நக்கீரரும் தமிழறியும் பெருமாளும்

சோழநாட்டில் உறையூரிலிருந்து ஒரு விறகுவெட்டி வந்து சங்கப்புலவர்களை அண்மி, "ஐயன்மீர்! உங்கள் ஆதரவை நாடி வந்துள்ளேன்" என்றான். சங்கத்தார் "உன் குறை யாது?" என வினவினர். விறகுவெட்டி "ஐயன்மீர்! என்னை அடாத புன்மொழியால் ஏசி என்முகத்து உமிழ்ந்து உன்னை ஒருத்தி மணப்பாளோ? என்று இகழ்ந்து, நகைத்து ஒதுக்கினள் தமிழறியும் பெருமாள் என்ற ஒரு தையல். அத் தீச் செயல் பொருது மனமுடைந்து உங்களிடம் வந்துள்ளேன். நீங்கள் என் மானத்தைக் காத்து அருள்புரிதல் வேண்டும்" எனக்கூறி வணங்கினன்.

இவ் வாசகத்தைக் கேட்ட சங்கத் தலைவர் நக்கீரர், "விறகு விற்பானு யிருந்தும் நீ ஒரு ஆண்மகனென்று உன்னைப் பொருட்படுத்தாது அத்தீச்செயலைப் புரிந்த அம் மடந்தை உன்னையே மணம்புரியும்படி செய்வேன்" என்று குகவேளை நினைந்து கூறி உடனே உறையூருக்குப் புறப்பட்டனர். "குக நமோ நம; வேல்மயில், வேல்மயில்" என்று அடியர்

என்பு கடித்தே வாழும் ஏதமுள நாய்க்கு, நெய்யை
அன்பாக வூட்டில், அதுசெறிக்க மாட்டாதே!

குழாம் ஒலி முழக்க, இவ்விறகு தலையனைப் பெருந்திருவினன் ஆக்குவன்" என்று கூறித் தேர்மீது ஏறிச் சென்று உறையூர் சேர்ந்தனர். அங்கு அவள் கேட்ட வினைக்களுக்குத் தக்க விடை தந்து அவளை வென்று, அவ் விறகுத் தலையனுக்கே அவள் மாலை சூட்டி மணக்கும்படி செய்து தாம் கொண்ட சூளை நிறைவேற்றினர்; அங்கிருந்து புறப்பட்டு ஈங்கோய் மலை எழுபது" என்னும் நூலை இயற்றி இறைவனைப் பணிந்து மதுரை வந்து சேர்ந்தனர்.

3. நக்கீரரும், திருவள்ளுவரும்

மதுரையில் நக்கீரர், திருவள்ளுவ தேவரைச் சந்தித்து,

"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனு அறமுதலா அந்நான்கும்—ஏனோருக்(கு)
ஊழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று".

என்னும் பாடலைப்பாடி அவரைச் சிறப்பித்தனர்.

4. நக்கீரரும், தருமியும்

பின்பு ஒருகால் தன் மனைவியோடு தனித்திருந்த பாண்டியன் தன் மனைவி கூந்தலிலிருந்து நறுமணம் வந்து வீசக் கண்டு, இந் நறுமணம் கூந்தலின் இயற்கை மணமோ என்று ஐயுற்று, "யான் ஐயுற்ற பொருள் இன்னது என்று விளக்குபவர்க்கு ஆயிரம் பொன் உள்ள இந்த முடிப்பு உரியதாகும்" என்று விளம்பரம் செய்து அந்த முடிப்பைச் சங்க மண்டபத்தில் தூக்கி நிறுவினன். பல காலம் அப் பொற்கிழி அறுப்பவரின்றி இருந்தது. நாட்டிற் பஞ்ச காலம் வந்தது. சோம சுந்தரப் பெருமானுக்குப் பூஜை புரியும் அர்ச்சகர் தருமி என்பவர், "பெருமானே! நான் வேறு நாட்டுக்குச் செல்வேன்;

கன்மம் மிகுந்து, கலகலத்த ஆக்கையர்க்குத்,
தன்மநூல் போதித்தால், தாம்செவியில் ஏறுமதோ ?

பஞ்சம் தீர்ந்தபின் வருவேன்" என்ருர். சிவபிரான் "அன்ப! இந்தப் பாடலை எடுத்துப் பாண்டியனிடம் காட்டு; அவன் சங்க மண்டபத்தில் தூக்கி வைத்துள்ள ஆயிரம் பொன் உனக்குக் கிடைக்கும்" என்று கூறிக்—

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி !
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ யறியும் பூவே"

என்னும் பாட்டை அளித்தனர். அங்ஙனமே தருமி பாண்டியனிடம் அதைக் காட்ட, தான் நினைத்த எண்ணம் அப்பாடலில் இருக்கக் கண்டு மகிழ்ந்து, "நன்று, ,சங்கத்தாரிடம் இப் பாடலைக் காட்டுக" என்ருன். தருமி அங்ஙனமே சென்று சங்கப் புலவர்களை வணங்கிப் பெரியோர்களே!

இக் கவியை நீங்கள் பார்த்து இங்குள்ள பொற்கிழியை யான் பெறும்படி அருள்வீராக" என்றனர். சங்க மண்டபத்திலிருந்த நாற்பத் தொன்பது புலவர்களில் நாற்பத் தெண்மர் அப் பாடல் சரியென்று ஒப்புக் கொள்ளத், தலைவராம் நக்கீரர் மாத்திரம் 'இப் பாடலிற் குற்றமுளது' என்றனர். இதைக் கேட்ட தருமி இறைவன் சந்நிதியை அடைந்து, "பெருமானே நீ அளித்த பாடலுக்கும் குறை கூறுகின்றனரே" என அழுது விண்ணப்பிக்க, பெருமான் ஒரு புலவர் உருக்கொண்டு சங்கப் புலவரிடம் வந்து, "எமது கவிக்குக் குறைகூறினவர் யார்?" என வினவினர். நக்கீரர் 'நான் தான்' என்ருர். 'குற்றம் யாது? என வினவினர் புலவர். "சொற்குற்றம் ஒன்றும் இல்லை, பொருட் குற்றந்தான் உளது" என்ருர் நக்கீரர். 'அது யாது?" என வினவினர் புலவர். "பெண்கள் கூந்தலுக்கு இயற்கை நறுமணம் உண்டு என்று அப்

அல்லே அறிவார்க்கு இடந்தந்தால், அன்னவரால்,
பொல்லாத சூழ்நிலைகள், பொங்கி வழிந்திடுமே.

பாட்டில் வருகின்றதே, அது உண்மை விரோதமாம் குற்றம்'' என்றார் கீரர். ''தேவமகளிர் கூந்தல் எப்படி?'' என்றார் புலவர். 'அதுவும் அப்படித்தான்! மணம் மலர்ச்சார்பால் ஆகுமன்றி இயற்கை மணம் மகளிர் கூந்தற்குக் கிடையாது'' என்றார் புலவர் பெருமான். ''உலகனைத்தும் ஈன்ற தாய்—நீர் வழிபடுந் தேவி—ஞானப்பூங்கோதையின் கூந்தல் எப்படி?'' என்றார். 'விதிவழி மதி' என்றபடி, ''அதுவும் அப்படித்தான்'' என்றார் கீரர்; இதைக்கேட்ட புலவர் தமது நெற்றிக் கண்ணைச் சிறிது காட்டினர்; 'நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றங் குற்றமே' என்றார் கீரர். காமனைப் பொடி செய்த நெற்றி விழித் தீ கீரரைச் சுட்டது. பெருமான் ''எம்மொடு மாறுபட்டுத் தேவி கூந்தலைப் பழித்த அறிவிலாய்; நீ குட்டநோய் கொள்'' என்றனர். நக்கீரர் பயந்து தமது பிழையை உணர்ந்து,

''நித்தனே போற்றி போற்றி நின்மலா போற்றி போற்றி
அத்தனே போற்றி போற்றி அநகனே போற்றி போற்றி
முத்தனே போற்றி போற்றி முத்தொழில் இயற்ற வல்ல
சித்தனே போற்றி போற்றி சிவசிவா போற்றி போற்றி''

எனத் துதித்து, ''தவறு பெரிதுடைத்தே, தவறு பெரிதுடைத்தே, தவறு பெரிதுடைத்தே'' எனத் துவக்கிக் 'கோபப் பிரசாதம்' என்னும் பாடலைத் 'தவறு பெரிதுடைத்தே, தவறு பெரிதுடைத்தே' என முடித்து வணங்கினர். சிவபிரான் கோபந் தணிந்து, 'நீ கயிலைகாணில் இக் கொடு நோய் தீரும்' எனக் கூறி மறைந்தனர். தருமிக்குப் பொற்கிழி அளிக்கப்பட்டது.

(தொடரும்)

பொன்னாசை, பொய்ப்பசி, பொய்யின்பம், பொய்த்துயில் என்னும் அவைகள் என்று தொலைந்திடுமோ?

இறை வழிபாடு

(பி. என். பாலசுப்ரமணியன்.)

'எல்லாமாய் அல்லவுமாய்' இலங்குகின்ற இறைவனது வழிபாட்டின் நோக்கங்களையும், பலன்களையும் பகுத்தறியு முன்னர், எல்லாம் வல்ல இறைவனது இயல்புகளை எண்ணிப் பார்த்தல் இன்றியமையாதது.

பிரபஞ்ச சிருஷ்டிக்கெல்லாம் இறைவனே காரண மாவான் என்று பிரம்ம சூத்திரங்கள் கூறுகின்றன. நாம் செய்யும் நல்லவைகளையும், அல்லவைகளையும், கர்ம பலன் என்ற பெயரால் நல்வினை தீவினைகளாக்கி அளிப்பவனும் அவனே. "அவனன்றி ஓரணுவும் அசையாது." இறைவன் தான் உலகங்களுக்கெல்லாம் காரணமானவன்; அவன்தான் பலதாதா என்று பாஷ்யங்களில் கூறப்பட்டுள்ளது. இன்ன பிறஇயல்புகளை உடையவன் இறைவன். இறைவனின் இயல்பு களை எங்ஙனம் எவ்வெண்ணம் எவரால் விவரிக்க இயலும்?

"இறைவனை உன்ன ஆரம்பித்து வழிபடு; அப்பொழுது எளிதாக மனத்தை அடக்கி இறைவனை அடைந்து இன்பமான பேரின்பத்தை நுகரலாம்" என்று பதஞ்சலியோக சூத்திரத்தில் காண்கிறோம். "காற்றில்லாத காலத்தில ஏற்றிய விளக்கு, ஆடாமல் அசையாமல் எங்ஙனம் எரிகிறதோ அதைப்போன்று நம்முடைய சித்தமும் ஆடாமல் அசையாமலிருக்க இறைவனை யாண்டும் இறைஞ்சல் வேண்டும்" என்ற யோக சாத்திரக் கூற்றும், ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது.

மாயத்தின் தோற்றமாகிய இவ்வுலகத்தினின்றும் விடுதலை பெற இறைவனது தொண்டும், வழிபாடும் அவசியம். ஆடாமல் அசையாமல், தூய உருவுடன் ஞான ஒளியாகத் திகழும் பொருளைக் கண்குளிரக் காணுவிடினும், அதனை நினைத்து

தேவியை என்றும் இறைஞ்சும் திருவினரை
சேவித்தா லும்சித்தி சித்திக்கும் என்பாரே.

நினைவிலிருத்தி வழிபடுவது நாம் உய்வதற்கு உகந்த வழி. மாசற்ற மாணிக்கத்தை வழிபட்டால் நாமும் அதைப் போன்றே ஆகின்றோம்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்பது பெருநாவலரின் பொய்யாமொழி. "பற்றுக்களைத் துறந்து பற்றற்றவனாய் இருப்பவனைப் பற்றிக்கொண்டால் நாமும் பற்றற்றவர்களாய்ப் பேரின்பத்தை நுகர இயலும்." *பற்றற்றவனைப் பற்றுவதென்பது, உண்மையான உள்ளத்தின்* உறுதுணைகொண்டு வழிபடுவதால்தான் இயலும்.

வழிபாடு :—

சாதி சமய வேறுபாடின்றி எப்பொழுதும் எவரும் இறைவனை வழிபடுதல் அவசியம். *"நாட்டில் பஞ்சம், சண்டை, சச்சரவுகள் எல்லாம் தெய்வத்தை மறந்த கொடுமைக்குக் கிடைக்கும் தண்டனைகளே. இவை எல்லாம் நம்மைத் திருத்த நேர்கின்றன என்று கொண்டு திருந்துவதே மனித ஜென்மத்திற்குத் தகுந்தது"* என்ற அறிஞர்களது அறை கூவல், இறை வழிபாட்டின் இன்றியமையாமையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்துகிறது.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளா ரடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

என்ற சேக்கிழார் வாக்கிற்கிணங்க, இன்பமேயன்றி எந்நாளும் துன்பமில்லை என்றுன்னி, சமய உண்மைகளைத் தெள்ளிதின் உணர்ந்து, மனித நிலையிலேயே இறை வழிபாட்டில் ஈடுபட்டு

ஆண்டவனை என்றும் மறவாத ஆன்மாவை
காண்பதுவே நல்ல கதிக்குவழி என்பாரே.

தெய்வத் தன்மை அடைய வேண்டுமென்பதே, உயிர்களின் முத்தி அல்லது மோட்சத்திற்காக, அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடும் நமது சமயங்களின் இலட்சியம். உலகங்களின் உள்ளமாகிய இறைவனுக்கும், தனித்துள்ள மனிதனின் உள்ளத்துக்கும் உறவாட வழிவகுப்பதே முறையான வழிபாடெனப்படும். உள்ளத்தினின்றும் வெளித் தோன்றுவதே உண்மையான வழிபாடு. வழிபடும் பொருளான மனிதனுக்கு, வழுத்தப்படும் பொருளாகிய இறைவன் உடனிருந்து ஆவன செய்கிறுன். சமயப் பெரியோர் பலரும், 'உள்ள முருகில் உடனுவர்' என்பதற்கிணங்க, உள்ளமுருகிய வழிபாட்டால் தான் பேரின்ப மெய்தின ரென்பது கண்கூடு.

வழிபாட்டு முறை :—

வழிபடும்பொழுது உடல், மனம் அனைத்தும் தூயதாயிருத்தல் வேண்டும். சந்தேகம், அறியாமை, உண்மை உணர முடியாமை ஆகிய அனைத்தும், உரிய வழிபாடுகளால் போக்கக் கூடிய பண்புடையன. பக்தியும், உயர்ந்த இலட்சியமும் வழிபாட்டிற்கு மிகவும் இன்றியமையாதன. அதிகாலையில் எழுந்து நீராடி வழிபடுவது சாலச் சிறந்தது. தன் நிலை மறப்பது வழிபாட்டின் இன்றியமையா உறுப்பு.

ஆலய வழிபாடு :—

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்." "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" போன்ற முதுரைகள், ஆலய வழிபாட்டின் அவசியத்தை வற்புறுத்துகின்றன. ஆலயத்தைத் தவிர வேறெந்த இடமும் மனத்தின் ஒருமைப்பட்ட வழிபாட்டிற்கு உகந்ததாயில்லை. "பசுவின் பால்சத்து அதன் உடல் முழுதும் பரவி யிருப்பினும், அதன் மடியிலிருந்து

ஆண்மாக்கள் பெண்மையன; ஆண்மையன்நம் ஆண்டவனே;
ஊன்றி இதைஉணர, உருகுகின்ற(து) நம்உளமே

சுரக்கும் பால்தான் சுவைமிக்கது.'' எனவே, ஆலய வழிபாடு அவசியம் என்பது தெள்ளிதின் புலனாகிறது.

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே

என்ற பாடலும்,

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே

என்ற திருநாவுக்கரசர் தேவாரமும், ஆலய வழிபாட்டின் அவசியத்தை வற்புறுத்துவது கண்டு தெளிக.

திருவள்ளுவரும் வழிபாடும் :—

திருவள்ளுவரின் வழிபாட்டுக் கருத்துக்களை ஈண்டுச் சிறிது காண்போம்.

கற்றதனா லாய பயன் என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ?

'' கற்பவனுக்கு அக்கல்வி அறிவான் ஆயபயன் யாது ? மெய்யுணர்வினை உடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்!'' பிறவித்துன்பமில்லாமலிருக்க இறைவழிபாடுஅவசியம்.

மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

'' மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார், எல்லா உலகிற்கும் மேலாய வீட்டு உலகின்கண் அழிவின்றி வாழ்வார்.''

வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விழைவும், வெறுப்பு மில்லாதவனது அடியைத் தொழுபவர்க்குப் பிறவித் துன்பங்களில்லை.

முண்டகன்வாழ் தூய உலகம் முதலாகும்
அண்டமெலாம் மீள்வனவே ஆருலகில்—கண்டாய்
எனையடைந்தார்க் கில்லையே எந்நாளும் மீண்டும்
துனிசெய்பிறப் பென்னத் துணி.

சிவனடியார் தாம்கொண்ட சிந்தை வலுவால்,
எவரையும் அச்சிவமா எண்ணுவது புண்ணியமே.

"என்னை யடைந்த மகாத்மாக்கள், துக்கத்திற்கு இருப்பிடமாயும், சாசுவதமற்றதுமான மறுபிறப்பை யுறையார்" என்ற பகவத் கீதைக் கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. இறைவனடி சேராதவர் பிறவித் துன்பத்தை அனுபவிக்க வேண்டும்.

தனக்கு விதிக்கப்பட்ட கர்மாவாகிய வழிபாட்டைச் செம்மையுறச் செய்து முடித்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பேரின்பத்தை யடைய வேண்டியது நமது தலையாய கடமை.

இறைவனை இடையரு துன்னி இன்புற் றிருக்க விழைவோர்
அறிவே யுருவாய அவனை அன்புடன் வழிபடல் வேண்டுமே.

—"இளங்குமரன்"

சித்தர் ஞானம்

"ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே
அனாதியான தொன்றுமே
கன்னல்நின்ற செம்பொனை
களிம்பறுத்து நாட்டினால்
அன்றுதெய்வம் உம்முளே
அறிந்ததே சிவாயமே.!"

"உண்மையான தொன்றதொன்றை
உற்றுநோக்கி உம்முளே
வண்மையான வாசியோடு
வாழ்த்திஏத்த வல்லிரேல்
தண்மைபெற்று இருக்கலாம்
தவமும்வந்து நேரிடும்
கர்மதர்மமான ஈசர்
காக்ஷிதானும் காணுமே!".

SAT SANG OR THE SCHOOLS OF DIVINES

The multitude of the many is but the expression of a single unity in creation. That unitary entity is what is described as Brahman by the upanishads. As there is no second entity, the lord is the one and the only one. The multitude in creation is but the variant expressions of the only one spirit that dwells and fills all creation. For ordinary mortals to realise this great upanishadic truth, 'Sat Sangh' is a vital necessity. Sat sangh teaches us one great truth. There are not as many men or beings as there are physical bodies. There are only as many men as there are minds. Where there is a large assembly and all the members are of the same view, there being no differences of views or opinions, it is stated that the assembly is of one mind. Thinking is mind's functioning. Where several people think alike, they are of several bodies, but af one mind. Where the several people think, contemplate and enjoy, that "SAT", that ever lasting all-pervading entity known as "Purusha", that "SAT" the inperishable, they are of one mind, that is the God-mind. Institutions that invite participation of the many individuals for the concentration and worship of the one imperishable "Sat"—the God entity, are dynamic schools of spiritual instruction. The experi-

ences of great spiritualists embodied in their own words, in the Vedas, Puranas, Prabandams, Thevarams, Tirupughazh songs and other outpourings of ecstatic and realised minds, are the text books of the divine schools mentioned above. In fact the Universe itself is the school, the sages and realised Bakthas and their *sayings are the professors; the one* subject of instruction and the exposition is Brahman—the one God of the Universe, the recital of His greatness, of His Universal love and of Prema, the essence of His Being. In this Satsang of the Universe, to attempt to know is worship, and to make effort to recite and to sing is becoming. There are no failures in this University of God love. All students pass through the multitude of well-apportioned classes-living in God, moving in God and having one's being in God. "Sat Sang" is the mighty transport of Humanity in their march to Divinity. Destination is reached when the student gets merged in the God of His being.

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்தி."

—*Tiruppugazah Mani.*

51

அபராதமா கியபல்சரக்(கு) அடலாகல டமதேற்றியே ;
விபரீதநோய் அலையிற்குளே, விடநின்று(து)ஊழ்; வினையென்
[செய்வேன் ;
இபராசனைக் கரையேற்றும்நீ, எனையேற்றஇங்(கு) அரிதல்லவே
நபராசனே ! சுபராசனே ! நாராயணா ! நாராயணா !!

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

ASOKA

Regd. No. M. 5390 Amirthavachani சித்திரை (1962 அமிர்தவசனி 14-1)

Coffee

Ours for Quality

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113

குடை மார்க் பினுயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி

1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirunalli Street, Madras-1